போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

திராவிடநாடு

மலர் 13 | 26—9—54 | இதழ் 13

தத்துவம் பேசுகிறார்!

[பரதன்]

★

"பயலே! இனிமையானது, குளிர்ச்சியானது, உடலுக்கு நல்லது என்று கூறி, எந்த இளநீர் பருகினாயோ, அது இருந்த அதே தென்னை தந்தது தான், நான் பருகிய, கள்! கேவலம் என்று பேசுகிறாய், புத்தித் தெளிவு இல்லாமல், கண்டிக்கிறாய், விவரம் தெரியாமல்"—என்று பேசினான், குடித்துப் புரண்ட குப்பண்ணன். குத்திவிட்டுக் கூலி கேட்கும் குருவப்பன் ஆமாம் சாமி போட்டான்!

★

"மலம், மலம் என்று கேவலமாகப் பேசுகிறாயே தம்பி! மலத்தைத்தான் எருவாகப் போட்டு கத்தரி பயிரிட்டார்கள். பிஞ்சுக் கத்தரி, சுவையாக இருக்கிறது என்று கூறினாயல்லவா! எந்த மலத்தைக் கேவலம் என்று பேசுகிறாயோ அந்த மலம் தந்த பொருள்தான் கத்தரி! அந்தக் கத்தரியும் மலமாகத்தான் ஆகப்போகிறது!" என்று சொன்னான், வேதாந்தம் படித்து மனதைக் குழப்பிக்கொண்ட மன்னார்சாமி.

★

"நான் உண்டு, என்னைப் பிடிக்க போலீசுண்டு, நீ யார் குறுக்கே வர! உன் வேலையைப் பார்த்துக்கொண்டு கிட!!" என்று கூறினான், களவாடிப் பிடிபட்ட கந்தன், வீட்டுச் சொந்தக்காரனிடம்.

★

"தெரு வழி வந்தால் என்ன, புறக்கடைப் பக்கம் வந்தால் என்ன, முக்காடிட்டுக்கொண்டு மறைந்து வந்தாலென்ன, வந்திருப்பது யார், நானல்லவா!!"—என்று நியாயம் பேசினான், யாருமறியாமல் புறக்கடைச் சுவர் ஏறிக் குதித்து, சந்தடி செய்யாமல் உள்ளே நுழைந்த கள்ளச் சாமியார்!

★

"உன்னை நான் மணம் செய்துகொண்டிருந்தால், இதேகாரியத்தைத் தானே, உன் பெற்றோர் சம்மதத்துடன் செய்திருப்பேன்! இப்போது நடைபெற்றதும் அதுதானே! இதற்கு ஏன் விம்முகிறாய், விசனப்படுகிறாய்!" என்று தைரியம் கூறுகிறான், கற்பழித்த கணபதியாப் பிள்ளை.

★

லால்குடித் தொகுதியில், ஜில்லா போர்டுத் தேர்தலுக்கு, காங்கிரஸ் அபேட்சகராக நிற்கும் ராஜா சிதம்பரம், இதுபோலவே ஒரு நியாயம் பேசுகிறார், சாகசமாக, துணிவுடன், எந்த இடத்திலிருந்து எதிர்ப்பும் கண்டனமும்பிறக்கவேண்டுமோ அங்குபுன்னகை கிடைத்துவிட்டதேஎன்ற பூரிப்பில், நான் முன்பு காங்கிரஸ் கட்சியை எதிர்த்துத்தேர்தலில் முறியடித்திருந்தால் என்ன, இப்போது அதுபற்றிக் கவனிக்கலாமா! இப்போது நாட்டிலே இரண்டே கட்சிகள் உள்ளன, ஒன்று கம்யூனிஸ்டு, மற்றொன்று கம்யூனிஸ்டு அல்லாதார்!! நான் இரண்டாவது!! இந்த அரசியல் தத்துவம் குடியாத்தம் பெற்றெடுத்ததாகும்!! — என்று பேசுகிறார்.

அரசியல் உலகிலே, இப்போது மூண்டு முடை நாற்றமடித்துக் கிடக்கும் நோய், இப்படியும் பேசவைக்கும், இதைவிட மோசமாகவும் பேசவைக்கும்! ராஜா சிதம்பரம்போல் துணிந்து செயலாற்றக்கூடியவர்களைமட்டுமல்ல; மிக மிகச் சாதாரணப் பேர்வழிகளை எல்லாம்கூடப் புதுப் புதுப் பாணியில் பேசவைக்கிறது—குடியாத்தம் தேர்தலிலிருந்து கிளம்பியிருக்கிறதாம், ஒரு புது அரசியல் தத்துவம்! அதன் இலட்சணம் இதுதானாம்—கட்சி மாறுவது, கொள்கையை மறப்பது, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நடந்துகொள்வது, திறந்த வீட்டுக்குள் நுழைவது, இத்யாதி!! அருமையாக இருக்கிறதல்லவா!!

பக்தர்களின் நெஞ்சு நெகிழும், பாமரரின் உள்ளத்திலும் பக்தி சுரக்கும், நன்னெறியில் நாட்டம் செல்லும், நாவார நாதன் நாமத்தைப் பஜிக்க வாய்ப்புக் கிடைக்கும்—என்று திருவிழா நடாத்துவதாகக் கூறுகிறார்கள் நவயுகத் தம்பிரான்கள், ஆனால் அதே திருவிழாவை, உண்ணவும் உரசவும், அள்ளவும் கிள்ளவும், அறுக்கவும் பறிக்கவும், இடிக்கவும் உடைக்கவும், சரியான 'சான்சு' என்று பலே பேர்வழிகள் கொள்கிறார்களல்லவா, அது போலவே, நாட்டு மக்களின் குறுக்கு நல்ல மதிப்பு அளித்து, ஒரு நாசகாரத் திட்டத்தைத் தொலைத்து, மக்களை மகிழவைத்த மகத்தான தொண்டுக்காகக் களித்து, நன்றி காட்ட வேண்டி, குடியாத்தம் தேர்தலில் காமராஜருக்கு பல்வேறு கட்சியினரும் ஆதரவு தந்தனர்—அந்தத் தூய காரியத்தையே

தமது தீய செயலுக்குத் திரையாக்கிக் கொண்டு திருவிளையாடல் நடத்துகிருர்கள், காற்றடிக்கும் பக்கம் திரும்பும் கனவான்கள்.

குடியாத்தம் தேர்தலின்போது ஏதோ ஓர் மாபெரும்சர்வகட்சி மாநாடு நடைபெற்றது போலவும், அதிலே பல்வேறு கட்சிக்காரர்களும் கூடிக் கலந்து பேசி, இனி நாட்டிலே இரண்டே கட்சிகள்மட்டுமே இருத்தல் வேண்டும் என்று முடிவெடுத்தது போலவும், அந்த முடிவின்படி, கம்யூனிஸ்டு, கம்யூனிஸ்டு அல்லாதார் என்று இருகட்சிகள்மட்டுமே இனி இயங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டதுபோலவும்,அந்த ஏற்புடைய திட்டத்தை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பைத் தம்மிடமே நாடு ஒப்படைத்திருப்பதுபோலவும், ராஜா சிதம்பரம் பேசுகிருர்!! தகிடுதத்தக்காரரை அவர்தம் 'தனம் தான்யம்' என்பது கண்டு தட்டிக்கேட்க அஞ்சிடும் நிலைக்குத் தமிழகம் வந்திருக்கிறது என்ற தைரியம், ராஜாவைப் பேசச் செய்கிறது. மிகமிகச் சாமான்ய அரசியல் தெளிவு படைத்தவனும் உணருகிருன், இவர்கள் ஏன் கட்சி மாறுகிருர்கள் என்பதனை! ஜனநாயகப் பண்பும், பொதுவாழ்வுத் துறையின் தூய்மையும், சுயநலப் பேய்பிடித்தாட்டும் நிலையிலுள்ளவர்களுக்குக் கால் தூசுதானே! கட்சிகள் அவர்களுக்கு வெறும் ஏணிகள்!! கட்சி ஊழியர்கள், அவர்களுக்குக் கையாட்கள்! கொள்கை என்பது அவர்களுக்கு, வெறும் எழுத்துக் குவியல்! குறி எப்போதும் பதவிமீது!! இப்படிப்பட்ட குணாளர்கள், வேறு நாடுகளிலே, மக்களால் பொதுவாழ்விலிருந்தே விரட்டி அடிக்கப்படுவார்கள்! இங்கோ,இதற்கு என்ன விலை? என்று அவர்கள் துணிந்து பேரமே பேசுகிருர்கள். தங்கள் அரசியல் ஒழுங்கீனத்தை மறைக்க, தத்துவம் பேசுகிருர்கள், தத்துவம்!!

ராஜா சிதம்பரம் எனும் ஒருவரின் போக்கு கண்டுமட்டுமல்ல, இதுபற்றிக் கூறுவது. ஒரு புதிய கூட்டமே உருவாகிறது!! மாணிக்கவேலர் என்பது அரசியல் அகராதியில் ஒரு புதுப் பதமாகிவிட்டதல்லவா, அதுபோல, அரசியலில் ஒரு புது இனமே உண்டாகிறது! எல்லோரையும் ஏமாளி என்று எண்ணிக்கொண்டு ஏய்த்துப் பிழைக்கக் கிளம்பும் இனம்! இடந்தேடிகள்!!

ராஜா சிதம்பரம், குடியாத்தம் தேர்தலின்போது காமராஜரை ஆதரித்தாரா? இல்லை,!

குடியேற்றம் தேர்தலில் காங்கிரசை எதிர்த்தவர் கம்யூனிஸ்டு, அந்தக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அணைப்பிலே இருந்துவந்தார், ராஜா சிதம்பரம்!

இப்போது "வலிய அணைந்த சுகம் போலே!" என்று கீதம் பாடிக்கொண்டு காங்கிரசிலே நுழைந்துவிட்டார்!! அந்தக் கட்சியோ இப்போது 'கண்டாரைக் கொல்லும்' கட்டழகியாகிவிட்டது!! கதவு திறந்தே இருக்கிறது! கண்ஜாடை காட்டிஞல் போதும், கட்டிலறைக்கே சென்றுவிடலாம்! தாராளம் தங்கு தடையின்றி பெருக்கெடுத்து ஓடுகிறது!! அந்தச் 'சுகானுபவத்திலே' ராஜா மூழ்கி ஆனந்தம் அனுபவிப்பதிலே யாருக்கும் மனத்தாங்கல் இல்லை. கட்சி மாறுவது என்பதே பெரிய 'பாபம்' என்று பேசிடும் பேதையர் இங்கு இல்லை! ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும்கூட, 'ஆபரேஷன்' முறையால் மாறலாமாமே!! ஆகவே, ராஜா சிதம்பரம், ரகுபதி ராகவ ராஜாராம் கோஷ்டியிலே சேருவதுபற்றி, யாரும் திடுக்கிட்டுப் போகவில்லை, ஆனால் அதற்கு அவர் 'தத்துவம்' காட்டுகிருரே, அதுதான் உண்மையிலேயே, மான ரோஷத்திலே கடுகளவு அக்கரையாவது உள்ள, எந்தக் கட்சிக்காரனையும் பதறச் செய்கிறது. குடியாத்தம் வழி காட்டுகிறதாம்!! அந்த வழி, ஜில்லா போர்டுக்குத்தான் கூட்டிச் செல்லும் போலும்!! நேற்றுவரையில், குடியாத்தம் தேர்தல் நடைபெறும்போது கூட ஐக்யமுன்னணியில் கூடிக் குலவினுர், இப்போது தத்துவம் பேசுகிருர்!! இது போதாதென்று பெரியாரின் போக்கை வேறு மேற்கோள் காட்டுகிருர்.

ஏதோ நெஞ்சிலே பேரிடி விழும்படியான, நல்லோர் கண்டு கைகொட்டி நகைக்கும்படியான நெருக்கடியின்போதாவது பெரியார் மீது 'பக்தியும்' அவருடைய போக்கை ஆதாரமாகக் காட்டவேண்டும் என்ற யுக்தியும் பிறந்ததே, அதுவரையில் மகிழ்ச்சிதான்! தமிழாசிரியர் பொன்னம்பலஞரை வாட்டியபோது, பெரியார் இருக்கிருரே, இடித்துரைப்பாரே என்ற எண்ணம் தோன்றவில்லை! "உங்க பெரியாருக்கு என்ன தெரியும்" என்று அதிகாரக் குரலில் பேச முடிந்தது. பெரியாரின் ஆதரவுடனும் ஆசியுடனும் துவக்கப்பட்ட திராவிட சட்டசபைக்கட்சியில் சேராமலிருக்க முடிந்தது. பெரியார் போக்கு நோக்கு பற்றிய கவலை அப்போது இல்லை. இப்போது!! ஓட்டு கேட்கச் செல்லுமிடமெல்லாம் கேள்விக் குறி தெரிகிறபோது 'ஓடி ஆடி வேலை செய்து பாடுபட்ட' நண்பர்களே, சாடுகிறபோது, 'பணம் தண்ணீர்பட்ட பாடு' ஆனல் தான் தப்பிப் பிழைக்கமுடியும் என்று தனவந்தர்களான நண்பர்கள் கூறுகிறபொழுது, கண் பஞ்சடையும்போது குற்றாலத்தானைக் கூப்பிடும் பக்தன் போல, இப்போது, பெரியாரின் பெயரை உச்சரித்து, பெரும் பழியை மறைத்திட முயலுகிருர், இந்தப் பெரிய புள்ளி!

ஆண்டவனுடைய பெயரை எவரெவரோ எதெதற்கோ உபயோகப்படுத்துவதுபோல, பெரியாரின் நிழலில் இருந்துகொண்டு எதை எதையோ செய்துகொண்டு வாழலாம் என்று வயற்றெரிச்சலையே வாழ்க்கை வழியாக்கிக் கொண்டதுகள் எண்ணுவதுபோல, ராஜா, நடத்தும் அரசியல் சூதாட்டத்துக்கு, பெரியாரின் போக்கை ஆதாரமாக்கிக்கொள்ளலாம் என்று கருதுகிருர்.

பெரியாருக்கு நாற்பதாண்டுப் பொது நலத் தொண்டு அளித்திருக்கும் செல்வாக்கு, இப்படிப்பட்ட சீரழிவான செயலாற்றும், சட்டை மாற்றுவோருக்குப் பயன்படவேண்டும் என்று எண்ணுவதைக் காட்டிலும் பெரியாருக்கு இழைக்கக்கூடிய பெரும் தீங்கு வேறு இருக்க முடியாது.

இந்த ஊர் சப்இன்ஸ்பெக்டரும் நானும் ஒரு சாலை மாணவர்கள் என்று கூறிக்கொண்டு, கன்னக்கோல் தூக்கும் கள்ளனை, நட்பின் பெருமையை உணர்ந்தவன் என்ரு கூறுவர்—கொண்டாடுவர்.

பெரியாரின் செல்வாக்கு, இப்படிப்பட்ட பெரும் பிழை புரிவோரைச் சுட்டுக் கருக்கும் தீ! அதைச் சுயநலக் கும்பல், 'குளிர்காய'ப் பயன்படுத்த எண்ணுவது, சகிக்கமுடியாத துரோகமாகும்.

அப்படித்தான் பெரியார் என்ன, ராஜாசிதம்பரங்களை அழைத்து, நீங்களெல்லாம் இனி காங்கிரசிலே சேர்ந்துவிடுங்கள்என்று சொன்ஞரா?

நாட்டிலே இனிக் காங்கிரசுக்கு எதிராக, ஜனநாயக முறையில், கட்சிகளே வேண்டாம் என்று பெரியார் கூறிவிட்டாரா?

கம்யூனிஸ்டு—கம்யூனிஸ்டு அல்லாதார் என்று இனி இரண்டே கட்சிகள் மட்டுமே இருக்கவேண்டும் என்று கூறிவிட்டாரா? இல்லை!!

குடியாத்தம் தேர்தலில் பெரியார் காமராஜரை ஆதரித்தது, ராஜசிதம்பரம் போன்றவர்கள் 'தத்துவம்' பேசிக்கொண்டு தகிடுதத்தம் செய்யட்டும் என்பதற்காக அல்ல!

நள்ளிரவிலே புகுந்து நவரத்ன மாலையைக் களவாடிச் செல்பவன், பிடிபட்டு வழக்கு மன்றத்தில் நிற்கும்போது, எல்லாம் மாயை! என்பது இந்த உடைமைக்காரரின் உயர்ந்த இலட்சியம், அதை நம்பித்தான் மாலையை எடுத்துக்கொண்டேன், என்று வாதாடுவது, ராஜாசிதம்பரம் வாதாடுகிருர், பெரியார் குடியாத்தத்தில் ஒரு தத்துவம்கண்டார், நான்அந்தத்தத்துவத்தின்படிதான் நடந்துகொள்கிறேன் என்று. நாடு, எதைச் சொன்ஞலும் கேட்டுக்கொள்ளும் என்ற தைரியம் அவருக்கு நிரம்ப இருக்கிறது. எதைச் சொன்ஞலும் கேட்டுக்கொள்

வது போன்ற நிலையில் இருப்பது போலத்தான் நாடு காட்சி அளிக்கும். ஆனால் உண்மையை நாடு உணரா மலிருக்கவில்லை.

எனக்குப் போட்டி யார் தெரியுமோ? அந்தப் பயல்கள்! கண்ணீர்த் துளி!—என்று ஒரு போடுபோட்டேன்—பிறகு தான் பெரியார் உண்மையை உணர்ந்தார்—என்று ராஜா பேசி மகிழக் கூடும். பெரியார், கண்ணீர்த்துளிகளிடம் கடும் கோபம் கொண்டிருக்கிருர், நாடு அறியும். ஆனல் அதற்காகவே, ராஜாவின் போக்கை அவர் மதிக்கிருர் என்று பொருள் கொள்வது அவரை அறியாதார் செயலாகும்!

பார்! பார்! மகா பெரிய மனுஷன் போல இருந்தான்! ஆசிரியர் பொன்னம்பலத்தை அல்லலுக்கு ஆளாக்கின போது நான் ஒருவன் இருக்கிறேன் என்று கூடக் கவனம் வரவில்லை. இப்போது, கண்ணீர்த்துளி போட்டியிடவே கோயில் படிக்கட்டு ஏறி இறங்குவதுபோல, நம்மை நாடி வருகிருன். வரட்டும்! வரட்டும்!! என்றுதான் பெரியார் கருதியிருக்க முடியுமே தவிர இதோ வருகிருர் ஒரு புதிய தத்துவப் பேராசிரியர் என்று பாராட்டியா வரவேற்றிருப்பார்!!

காமராஜரைப் பெரியார் ஆதரித்தார். அதனுல் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிருர் என்று எந்த மதியிலி பொருள் கொள்ளச் சொன்ஞன்.

காமராஜ்—காமராஜ் சர்க்கார்—காங்கிரஸ் கட்சி—மூன்றும் ஒன்றுபோலத் தோன்றும், அரசியல் யூகமற்றவர்களுக்கு. வேறு வேறல்லவா அவை!

காமராஜரை ஆதரித்தார் பெரியார்—உழைப்பால் உயர்ந்தவர்—கொள்கையில் பற்றுள்ளவர்—மக்களின் குரலுக்கு மதிப்பளிப்பவர்—மனுதர்மப்பாதுகாவலரின் திட்டத்தை ஒழித்தவர், என்பதால். காங்கிரஸ் தலைவர் என்பதற்காக அல்ல; காங்கிரஸ் தலைவராக இருந்த போதிலும் இவ்வளவு நற்பண்புகளுக்கு இருப்பிடமாகி, காட்சிக்கு எளியோனய் இருப்பது கண்டு.

காமராஜரை மட்டுமல்ல, அத்தகைய பண்புகள் கொண்ட யாரையும், அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் (திராவிட முன்னேற்றக் கழகம் தவிர!) ஆதரிப்பார், பாராட்டுவார்.

இதை அவர் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகவே நடைமுறையாக்கிக் கொண்டிருக்கிருர்.

கலப்பு மணம் செய்து கொண்டதற்காக டாக்டர் சுப்பராயனை இன்றும் பாராட்டுகிருர். ஆரிய இன உயர்வுக்குப் பாடுபடும் ஆச்சாரியாரையே பன்முறை பாராட்டியிருக்கிருர்.

காமராஜரைப் பாராட்டுவதென்பது, எல்லோரும் காங்கிரசில் மூழ்கிவிடுங்கள் என்று கூறுவதாகாது.

சிறுமலை வாழைப்பழம் நல்லது என்று கூறிவிடுவதாலேயே, சிறுமலையில் உள்ள அத்தனையும், குப்பை கூளம், குளவி ஒணன், அத்தனையும் நல்லது என்று பொருள் கொள்வது.

சென்ற கிழமைதானே பேசியிருக்கிருர், காங்கிரஸ் மந்திரிசபையில் நிதி அமைச்சராக உள்ள கனம். சுப்ரமணியத்தின் போக்கைக் கண்டித்து.

காமராஜரை ஆதரிப்பது போலவே, காமராஜ் சர்க்காரையும் பெரியார் ஆதரிப்பார், செயல் கண்டு, சீர்தூக்கிப் பார்த்து.

★

★

வெற்றிக்கு உழைத்தவர்களே!

அக்டோபர் 15 கவனமிருக்கட்டும்

★

ஆரம்பக்கல்வித் திட்டம்பற்றி ஆராய்ந்து புதுமுறைகள் வகுத்துத் தர, சென்னை சர்க்கார் (கனம். சுப்பிரமனியம் கூறியபடி) ஒரு நிபுணர் கமிட்டி நியமிக்கத் தீர்மானித்திருக்கிறதாம். இந்தக் கமிட்டி, அக்டோபர் 15-க்குமேல், அமைக்கப்படுமாம். ஆச்சாரியாரின் நிழல் இந்தக் கமிட்டியில் படராதிருக்கவேண்டும். ஒழிக்கப்பட்ட குலக் கல்வித் திட்டம் உடையை மாற்றிக் கொண்டு உள்ளே புகாமலிருக்க வேண்டும்.

★

★

காமராஜ் சர்க்காரை மட்டுமல்ல, அருமையான காரியங்களைச் செய்த போது ஆச்சாரியார் சர்க்காரையும் ஆதரிக்கத்தான் செய்தார்.

இவைகளைக் கொண்டு பெரியார், காங்கிரசை ஆதரிக்கிருர் என்று முடிவு கட்டுவது. பேதைமை! பெரும் பிழை!!

கடந்த பொதுத் தேர்தலின் போது, கம்யூனிஸ்டுகளைப் பெரியார் ஆதரித்தார்—நாடே கூறலாயிற்று பெரியார் கம்யூனிஸ்டாகி விட்டார் என்று! பித்தர் சிலர் அவர் திராவிடர் கழகத்தையே கலைத்துவிடப்போகிருர் என்று கூறினர். பிடித்து வைத்தால் பிள்ளையார் வழித்து எறிந்தால் சாணி என்ற நிலையில் உள்ள சிலர், பெரியார், கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பது கண்டு, கம்யூனிஸ்டுக்கோலமே பூண்டு பூரித்தனர். இன்று என்ன நிலைமை! இதே போலத்தான், எதிர் காலத்தில் காங்கிரஸ் விஷயமாகவும்!!

பெரியார், திராவிட மக்களின் நலனைக் கருத்தில் கண்டு அவ்வப்போது கொள்கை வகுப்பார், திட்டம் தீட்டுவார், நாம் அவைகளை ஏற்று நடக்க வேண்டும் என்று டி. பி. வேதாசலமும் நீடாமங்கலம் ஆறுமுகமும் கூறுவதிலே பொருளும் உண்டு, பொருத்தமும் உண்டு. ராஜா சிதம்பரம், நான் பெரியார் காட்டிய குடியாத்தம் தத்துவத்தைப் பின்பற்றுகிறேன் என்று பேசுவதிலே, பொருள் இருக்க முடியுமா, பொருத்தம் தான் உண்டா!

ஆனல் ராஜா சிதம்பரம் தத்துவம் பேசுகிருர்!!

★

"இவைகளை எல்லாம் விட காங்கிரஸ்காரர்களின் பெரிய மானக்கேடான காரியம் என்னவென்றால் காங்கிரஸ்காரனல்லாதவராய் இருந்த காலத்தில் எவன், ஸ்தலஸ்தாபனங்களில் திருடினானே, கொள்ளை அடித்தானே, திருடினான், கொள்ளை அடித்தான், போர்ஜரி பண்ணினான், பொய்க் கணக்கு, பொய்ப்பில்லு போட்டுப் பணம் சம்பாதித்தான், கண்ட்ராக்டில் கொள்ளை பாதகனாய் நடந்து கொண்டான் என்று கூப்பாடு போட்டார்களோ அவனையே காங்கிரஸ் சார்பாய் காங்கிரஸ் மெம்பர்கள் நிறுத்துகிறார்கள் என்றால் காங்கிரசின் யோக்யதைக்கு வேறு எதை உதாரணமாகச் சொல்லுவது என்பது நமக்குப் புரியவில்லை."

★

பெரியாரின் கருத்துரை இது! ராஜா சிதம்பரனரின் காங்கிரஸ் பிரவேசத்தைக் குறித்துக் கூறப்பட்டதல்ல. முனிசிபாலிடி, ஜில்லாபோர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்ற காங்கிரஸ்காரர்கள் கையாளும் தேர்தல் தந்திரங்களைக் கண்டித்து முன்னம் பெரியார் கூறிய கருத்துரை இது. காங்கிரசில் சேருவோரும், சேர்ந்தால் பெரியாரால் பாராட்டப்படுவோம் என்று தவருகக் கருதுவோரும், இந்தப்போக்கைப் பெரியார் எவ்வளவு வன்மையாகக் கண்டித்திருக்கிருர் என்பதை அறிந்து கொள்ள உதவட்டும் என்பதற்காகவே இதனை எடுத்துக்காட்ட நேரிட்டது.

'இரத்னச் சுருக்கமாக'ப் பெரியார் கூறிவிட்டார் இந்தச் செயல் பற்றி, போக்கு பற்றி. மானக் கேடான காரியம்!

★



20. ஆறுமுகம் பிடிபட்டான்

அவனுடைய கோரப் பார்வை அவளை நடுக்கியது. "ஐயோ......" என்று அலறிய வண்ணம் திரும்பிக் கதவருகில் ஓடினாள். ஆறுமுகமும் அவள் பின்னே ஓடினான். அவன் அவளுடைய தோளைப் பிடிப்பதற்கும், அவள் அந்தக் கதவை திறக்கத் தாழ்ப்பாளில் கைவைப்பதற்கும் நேரம் சரியாக இருந்தது.

"அடபாவி......" என்று அவளுடைய கையை இறுக்கிப்பிடித்து இழுத்துக்கொண்டு மறுபக்கம் ஓடினான் ஆறுமுகம்.

"ஐயோ......அம்மா......என்னை விட்டுடேன்..........நான் ஓடிப் போறேன்.........!" என்று கூறி அழுதுகொண்டே துவண்டு விழுந்தாள் பொன்னி.

"எங்கேடி, நீ மாத்திரம் போறே? என்னைப் போலிசிடம் பிடித்துக் கொடுத்துவிட்டு நீ எங்கேடி போறே!" என்று கத்தினான் ஆறுமுகம்.

பொன்னி திடுக்கிட்டாள். "ஐயோ .....நான் பிடித்துக் கொடுக்கிறதா? ஐயோ......எனக்கு ஒன்னும் தெரியாதே, அண்ணே! நான் ஒரு பாவமும் அறியாதவள் அண்ணே!" என்று பொன்னிகெஞ்சிக்கொண்டு இருக்கும்போது ஆறுமுகத்தின் கை அவள் கழுத்தில் போயிற்று.

"இல்லேண்ணே......நான் ஒன்றும் சொல்லலையண்ணே......ஹிம் ......ஐயோ......அம்மா.........ஹிம் ....ஹிம்........." பொன்னியின் நாக்கு அதற்குமேல் புரளவில்லை. அதற்குள் ஆறுமுகத்தின் பிடி இறுக்கியது. பொன்னி பரிதாபமாகப் பார்த்தாள். அவளுடைய விழி பிதுங்கி வெளிவந்துகொண்டிருந்தது.

"போலிசுக்கு உளவா சொல்லிக் கொடுத்தே! சனியனே...முதல்லே நீ சாவு!" என்று உரக்கக் கூறிக் கொண்டே பிடியை இன்னும் இறுக்கினான். அவள் பரிதாபமுகம் மெதுவாக சாய்வதைத் திருப்தியோடு பார்த்துக்கொண்டிருந்தான்.

அதே நேரத்திலே மாடிக்கதவுகளை யாரோ இடிக்கும் சப்தம் கேட்டது.

படபடவென்று கதவைத் தட்டிக்கொண்டிருந்தனர் போலீசார். அவர்கள் கதவைத் தள்ளும் வேகத்தில் இன்னும் சில நிமிடங்களில் கதவு உடைந்துவிடுமென்று நிச்சயமாகத் தெரிந்தது. பயந்து, அப்படியே பொன்னியைப் போட்டுவிட்டு மறுபடியும் ஓடி மாடிப்படிகளில் ஏறினான்.

மேலே லைட் ஹவுஸின் அடிமண்டபம் இருந்தது. மேலெல்லாம் ஆற்காடு நவாபின் கலையுணர்ச்சியைத் தெளிவுப் படுத்தும் வர்ணப் பூச்சுகள் அவன் மூளைக் குழம்பி இருப்பதுபோல கலைந்து காட்சியளித்தன. நடுவிலே இரும்புப் படிக்கட்டுகள் நேராக "கலங்கரை விளக்க"மான அந்த விளக்கிற்கே சென்று கொண்டிருந்தன. அதிலும் ஏறி 'லைட் ஹவுஸின்' கடைசி மாடிக்கே சென்று டக்கென்று அந்தக் கதவையும் தாழ்ப்பாள் போட்டுவிட்டு திரும்பிப் பார்த்தான். உலகம் பூராவும் அந்த இடத்திலே இருந்து பார்த்தபோது தெரிந்தது. கம்பி ஓரத்தில்வந்து குனிந்து பார்த்தான்.

ஐயோ! சென்னை நகரம் பூராவும் சிறு கட்டிடத் திட்டுகளாகத் தெரிந்தது. கீழே நடந்துபோகும் மனிதர்களும், டிராம், பஸ் வண்டிகளும் எறும்புக்கூட்டங்கள்போலத் தெரிந்தன. ஆறுமுகத்திற்கு மயக்கம் வந்தது. கம்பியைப் பிடித்துக் கொண்டே மறுபக்கம் போனான். அங்கே குனிந்து பார்த்தபொழுது அவன் கண்ட காட்சி அவனை திடுக்கிட வைத்தது.

கீழே நாலைந்து லாரிகள்வந்து நின்றன! அதிலிருந்து போலிஸ்காரர்கள் இறங்கிக் கொண்டிருந்தனர். ஒரு லாரியிலிருந்து இறங்கிய போலீசார் கையில்பெரிய வலைகளை எடுத்துக் கொண்டு வந்தனர். கூட்டம் கூட்டமாக போலீசார் நாலுபக்கமும் ஓடிக் கொண்டிருந்தனர்.

பயந்து மறுபக்கம் ஓடினான்.

அங்கே கண்ட காட்சி அவனை இன்னும் திடுக்கிட வைத்தது.

நாலைந்து கார்கள் வந்துநின்றன. அதிலிருந்து பத்து பன்னிரெண்டு போலிஸ் ஆபீஸர்கள் இறங்கிக் கொண்டிருந்தனர். அந்தக் கூட்டம் காரிலிருந்து இறங்கியவுடன் இருபது முப்பது போலிஸ்காரர்கள் வந்து வரிசையாக நின்றனர்.

சில நிமிஷங்கள் பொறுத்து எல்லோரும் அண்ணாந்து அவனையே பார்ப்பது போலத் தோன்றியது. அப்படியே அவன் தலையில் யாரோ பெரும் பாராங்கல்லைத் தூக்கிப் போடுவது போல உணர்ச்சி ஏற்பட்டது. இருதயம் வேகமாக அடித்துக் கொண்டது. கால்கள் தானாக உணர்ச்சியிழந்து, தென்பிழந்தன. அவனைப் பிடிக்க நாலு பக்கமும் ஆயிரக்கணக்கான போலிசார் கீழேநின்று கொண்டிருந்தனர். ஒரு போலிஸ்படை அவனைப் பிடிக்க பின்னால் வந்து கொண்டிருக்கிறது. கீழே குதித்தால் கூட அவனை அப்

[16-ம் பக்கம் பார்க்க]

பணம் பாழாகும் படலம்

"ஏண்டி வத்சு! நீ எவ்வளவோ சமத்துன்னு நான் மாப்பிள்ளை விட்டாரிடம் சொல்லிண்டிருக்கேன், நீயோ வரவர மக்காயிண்டிருக்கயே, என்மானம் போறதேடி. நாலுபேர் காதிலே விழுந்தா என்ன சொல்லுவா, கண்ணிலே பட்டா என்ன பேசுவா எங்கிற புத்திகூட இல்லாமப்படிக்கு நடந்திண்டிருக்கயே."

"போடா, நீ எப்பவும் என்னைக் கேலி செய்யறதே வேலையா வைச்சிண்டிருக்கே."

"அசடு! அசடு! உன்னை நான் எவ்வளவு புகழ்ந்துபேசியிருக்கேன். எம்.எஸ். போலப்பாடுவா! வைஜயந்தியாட்டமா ஆடுவா! சான்சு கிடைச்சா, துர்காபாய் போலநிர்வாகம் நடத்துவா. வீரத்திலே ஜான்சிராணி போலத்தான்! சரோஜனி போலக் கவிதை எழுதுவள்! என்று எவ்வளவோ சொல்லியிருக்கேண்டி.. மாப்பிள்ளை அப்படியே சொக்கிப் போயிட்டானேல்லோ..."

"இப்ப என்ன கசக்கறது என்கிறரோ!"

"எப்படிஉ சொல்லுவன். உன்னோட தளுக்கும் குலுக்கும் மினுக்கும் அவனைமயக்கிட்றது. அதையா நான் இப்பச் சொல்றேன். நீ செய்கிற காரியம், ஒண்ணாவது ஒழுங்கா இல்லையே. உன் எதிரிலே, அவன் அடங்கிக்கிடக்கிறன். பரதேவதையோட வம்பு வைச்சிண்டா, அம்சதூளிகா மஞ்சம் அக்னிச் சட்டியான்னே மாறிடும், அவனுக்கு அது தெரியாதோ. ஆனா, என்னிடம் தனியாவந்து தலை தலைன்னு அடிச்சிண்டு அழறன். போன வெள்ளிக்கிழமை இருநூறு ரூபா செலவிலே, குழந்தைக்கு வாங்கி வச்சிருந்த விளக்கெண்ணெயைக் கொட்டி நாசமாக்கி விட்டயாம்....."

"பெரியப்பிரமாதம்! போடா அண்ணா! ஐயயோ, புடவை பாழாயிட்டுதேன்னு நான் சொன்னப்போ அவர் என்ன சொன்னர் தெரியுமோ....."

"என்ன சொல்லியிருப்பன்,பரவாயில்லை, வருத்தப்படாதேன்னு சொல்லியிருப்பன். இல்லேன்னா, நீ பத்ரகாளியாட்டமன்னா ஆடியிருப்பே. என்னோடு வந்தன்னா ஏக்காலே அழறன். ரிஸ்ட்வாட்ச் வாங்கிண்டு வந்தானும், அதைத் தூக்கி, மோடார் டிரைவருக்குக் கொடுத்து விட்டயாம்....."

"என்னவாம், மோடார் டிரைவர் ரிஸ்ட்வாட்ச் கட்டிக் கொள்ளக் கூடாதோ....."

"ஏண்டி அசடே! பெரிய சமதர்மம், சமத்துவம் பேசறியோ! ரிஸ்ட்வாட்ச் கட்டிக்க வேண்டாம்னு யார் சொன்னா! பணம் போட்டு வாங்கிக் கட்டிக்கொள்ளட்டும். உனக்குன்னு புதுச்சேரியிலிருந்து மாப்பிள்ளை வாங்கிண்டு வந்திருக்கான், எவ்வளவோ ஆசையா, அதைப் போய் டிரைவருக்குக் கொடுத்து விட்டயே, மாப்பிள்ளை எவ்வளவு வருத்தப்பட்டார் தெரியுமோ....."

"சும்மா தத்துபித்துன்னு உளறுதே. டிரைவருக்கு, ரிஸ்ட்வாட்ச் காரியமில்லாமே கொடுக்கலே. பகலெல்லாம் ஆபீசுக்கும் கிளப்புக்கும் மோடார் ஓட்டிண்டு போறன். அந்தச் சிரமத்தைக் கூடக் கவனிக்காமே, இராத்திரி பத்துமணிக்கு மேலே ஜனசந்தடி அடங்கினதும், பீச்ரோடிலே, நேக்கு மோடார் டிரைவிங் சொல்லிக் கொடுத்தான். இப்ப, கிர் போடறது மட்டும் தான் தெரியாது, மத்தது தெரியும், தெரியுமோ? அதுக்காகத்தான் ரிஸ்ட்வாட்ச் அவனுக்கு. மாப்பிள்ளைக்கே தெரியுமே........"

"ஏண்டி! மாப்பிள்ளைக்கே டிரைவிங் தெரியுமே........"

"அதுக்கு என்ன தெரியும்! நீ தான் மெச்சிக் கொள்ளணும், டிரைவிங் மட்டும் தான் தெரியும், டிரைவிங் கத்துக் கொடுக்கத் தெரியாது!"

"உன்னோடு பேசமுடியுமாடிம்மா வக்கிலாயிருக்கவேணும், போறது, தோடு வாங்கின்யாமே, அதிலே இருந்தது வைரம்னு சொன்னயாம், மாப்பிள்ளை சொல்றர் ரங்கோன் கமலம்னு......"

"ஆமாம் அதிலே ஏமாந்து தான் போயிட்டேன்."

"ஆறு சவரன் கொடுத்துச் செயின் செய்தயாம்........"

"நான் என்னடா செய்யறது, நகை செய்கிறவன் இரண்டு சவரனைத் திருடிக்கொண்டா......"

"பணம் பாழாறதே. ஏண்டிம்மா, செடியிலே முளைக்கிறதா பணம்! மாப்பிள்ளை எவ்வளவு பாடுபட்டுப் பணம் சம்பாதிக்க வேண்டி இருக்கு தெரியுமோ........"

"நேக்குத் தெரியும். அதனாலே நான் என்ன பணத்தை வாரி இறைத்து விடறேனா. அதோட அம்மாதான் என்னைச் சபிச்சுக் கொட்றன்னா, நீயும் அவளோட சேர்ந்துண்டு என்னைத் தூஷிக்கறயாக்கும்........"

"பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன், முடியலையே, வரவர மோசமாயிண்டிருக்கே. இப்படி ஊழல் இருந்தா வீடு உருப்படுமோன்னு மாப்பிள்ளைவிசாரப்படாம இருக்க முடியுமோ? வீட்டு விவகாரத்தை ஒழுங்காகக் கவனிக்கத் தெரியல்லே, முடியல்லே, இந்த இலட்சணத்திலே லேடிஸ் கிளப் தகராறுக்கு நீ தான் பஞ்சாயத்து செய்து வைக்கக் கிளம்பிடறயாம், பத்மா ஆம்படையானுக்கு கம்பெனி நிர்வாகம் எப்படி இருக்கவேணும்னு யோசனை சொல்லப் புறப்பட்டு விட்டயாம்........"

"அவா அழைச்சா போகப் படாதோ........"

"போகலாம்டி வத்சு! போகலாம். மதிப்புதான், கியாதி தான் அதாலே. ஆனா நம்ம வீட்டு வேலையும் ஒழுங்கா இருக்க வேணுமோ.........."

"எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கு, போதும் உபதேசம், யாரோ வர்ரா........"

★

வத்சுவும் வரதனும் உடன்பிறந்தார்கள். வரதனாலேயே சகித்துக் கொள்ள முடியவில்லை, வத்சு நடத்தும் குடும்ப நிர்வாக ஊழல். புத்திமதி கூறிப்பார்க்கிறன். ஆனால்

வெளியார் காதிலே விழக்கூடாது என்பதிலே விசேஷ அக்கரை அவனுக்கு, குடும்ப கௌரவம் கெடக்கூடாதே!! ஆகவே மற்றவர் எதிரில், வத்சுவின் திறமையையும் குணதிசயத்தையும் புகழ்கிருன். வத்சு எப்படித் திருந்த முடியும்!!

★

வத்சு கிடக்கட்டும், நேரு பண்டிதரின் நிர்வாகம் எப்படிச் சீர்படும், ஊழல் தலைவிரித்து ஆடுகிறபோது கண்டிக்காவிட்டால், மீண்டும் மீண்டும் ஊழல் முளைக்காதபடி நிர்வாக முறையை மாற்றி அமைக்கா விட்டால்!

நேரு பண்டிதரின் நிர்வாகத்திலே, ஊழல்களும் திட்டங்களும் பிறந்த வண்ணம் உள்ளன.

கண்டிப்பதையே 'தேசத் துரோகம்,' என்று கருதும் மகானுபாவர்களிடம் மக்கள் சிக்கிக்கொண்டிருக்கிருர்கள்.

குலாம் சர்க்கார், பினமி சர்க்கார், பதவிவேட்டைக்கார சர்க்கார், என்று நாக்கில் நரம்பின்றி பல கட்சியினரையும் குழுவினரையும் தூற்றினுர்கள். தூற்றினவர்கள் துரைமகனுகிவிட்டார்கள், துதிபாடகர்கள் சூழ்ந்து நிற்கிருர்கள். ஊழலோ, என்றும் இல்லாத அளவுக்கு இருக்கிறது — வளருகிறது! நேரு பண்டிதர் மதிநுட்பம் மிகுந்தவர்—ஆனுல் மதி நுட்பம் அவ்வளவும் 'உலகத் தலைவர்' எனும் இடம் பிடிக்கும் வித்தையிலேயே செலவாகி விடுகிறது, ஊராளும் முறையிலே ஏற்படும் ஊழல்களைக் களைவதற்கு அவருக்கு நேரமும் இல்லை, நினைப்பும் இருப்பதில்லை, யாரேனும் இடித்துரைத்தாலோ, அவருக்குக் கோபம் கொதித்தெழுகிறது. மகத்தான புரட்சி உருவாகிக் கொண்டிருக்கும் போது, மதியிலிகளே! இந்தச் சில்லறை விஷயத்தையா எண்ணிக் கொண்டிருப்பது, என்று முழக்கமிடுகிருர்.

சில்லறை விஷயமாம்! அவருக்கு! ஆனுல் மக்களுக்கு இந்தச்சில்லறை விஷயம் பலப்பல கோடி ரூபாய் நஷ்டமல்லவா ஏற்படுத்தி விடுகிறது.

வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி மக்கள் வரி தருகிருர்கள். ஊழலால் பணம் பாழாகிக் கொண்டு வருகிறது! கேட்டால், தெரியாதா பார், இந்தோ-சீன பார்! என்று பண்டிதர் படம் காட்டி விடுகிருர்.

ஓடாத ஜீப், உடைந்த மெஷின்கள், காற்றடித்தால் பறக்கும் ரெடிமேட் வீடுகள், யந்திர எரு ஊழல் என்று அடுக்கடுக்காக! பொது மக்கள் பணம் இதனுல் பலகோடி நஷ்டமாயிற்று.

அவருடைய மேதை, ராஜதந்திரம், அவருடைய உலக சமாதானத் திட்டம் என்று அபின் பேச்சுப் பேசுகிருர்கள், காங்கிரஸ் அன்பர்கள்! அவ்வளவு புகழ்மாரி பொழியப்படும் நிலையில் உள்ளவர் ஆட்சியிலே இவ்வளவு ஊழல்! வெட்கம் ஏற்படவேண்டாமா!!

நேரு பண்டிதரின் ஆட்சியிலே காணப்படும் ஊழல்களில் நூற்றில் ஒரு பங்கு மற்றக் கட்சியினர் ஆட்சியிலே தெரிந்தால், இவ்வளவு நேரம், கனல் கக்கி இருக்கமாட்டார்களா, ஒழிக! ஓடுக! என்ற முழக்கம் இடி ஓசையைத் தோற்கடித்திருக்குமல்லவா! காரசாரமான கண்டனங்கள் நாலா பக்கமுமிருந்து கிளம்பியிருக்குமே! இப்போது? வத்சுவுக்கு அண்ணன் வரதன் புத்தி கூறுவதுபோல, 'நாசுக்காக'ப் பேசுகிருர்கள்.

எவனே ஒரு 'விவஸ்தை' தெரியாத வெள்ளைக்கார மாஜிஸ்ட்ரேட், சத்யாக்ரகம் செய்த மாதிடம், தாலியில் இருந்த பொன்னை அபராதத்துக்காக எடுத்துக்கொண்டதற்காக, இராமசாமி முதலியாரை, தாலி அறுத்த முதலியார் என்று, எத்தனை காங்கிரஸ் தலைவர்கள் ஏசினர்—சபித்தனர்.

கோடி கோடியாகப் பணம் பாழாகிறது — எனினும் மனிதருள் மாணிக்கம், ஜவஹர், எனவே, ஒரு சொல் பேசக்கூடாது!

காங்கிரஸ் தலைவர்களோ கண்டிக்க மாட்டார்கள்—சொந்தக் கட்சியின் கீர்த்தி கெட்டு விடும் என்ற அச்சம்.

நாம் கண்டித்தாலோ, காங்கிரஸ் விரோதிகள் இப்படித்தான் பேசுவர் என்று மழுப்பி விடுகிருர்கள்.

ஊழலோ நின்றபாடில்லை—ஊழலுக்குக் காரணமாக உள்ளவர்களோ ஒரு குறையுமின்றி உயர் பதவிகளில் உல்லாசமாக வாழுகிருர்கள்; மக்களிடம் வரி கேட்பதற்கும் கடன் கேட்பதற்குமோ சர்க்கார் தயங்குவதில்லை.

கடன் கேட்டது சர்க்கார், 150 கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தனர் நாட்டவர். பணமோ பாழாகிக் கொண்டிருக்கிறது.

1952ம் ஆண்டு கணக்கு அறிக்கை, பாராளு மன்றத்தில் சென்ற கிழமை விளக்கப்பட்டது. பல ஊழல்கள் அம்பலமாயின.

வெளிநாடு ஒன்றில், இந்தியத் தூதர் அலுவலகத்தாருக்காக உணவு விடுதி நடத்தப்பட்டதாம், அதன்மூலம் ஏற்பட்ட நஷ்டம் 1,40,519-0-0! எப்படி இருக்கிறது நிர்வாகம்!! சண்முகமும் இராமசாமியும் இன்ன பிறரும், இன்று நேருவும் கித்வாயும் இருக்கும் இடங்களில், அதிக அதிகாரமற்று ஆனந்த விகடன் போன்ற ஏடுகளின் ஏசலையும் தாங்கிக்கொண்டு அரசோச்சினர். நேரு பண்டிதரின் ஆட்சிக்கால ஊழல்போல ஏதே

எமது புதிய வெளியீடு

சி. என். அண்ணுதுரை

தீட்டிய

★ கலிங்க ராணி ★

விலை ரூ. 3-0-0

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி.

னும் உண்டா! தலையல்லவா உருண்டிருக்கும்! திருமயிலை வீரர்களும் திருவல்லிக்கேணித் தீரர்களும் சும்மாவா இருந்திருப்பார்கள்! இதோ பண்டிதர் ஆட்சியிலே பணம் பாழாகிறது, யார் கண்டிக்க முடிகிறது!!

நீண்ட தூரத்தில் நடைபெற்ற 'விவகாரம்' எனவேதான் ஊழல் ஏற்பட்டுவிட்டது; தடுக்க முடியவில்லை, என்று வாதாடுவர், இதோ அருகிலே காணக் கிடக்கும் ஊழல்! நேபாள அரிசி வாங்கினார்கள், நேரு சர்க்கார். நேபாளம், டில்லிக்கு நெருங்கிய தொடர்புகொண்ட நாடு. இங்கு நடந்த அரிசி வியாபாரத்தில் மட்டும் 36,62,717 நஷ்டம்! நிர்வாகத் திறமைக் குறைவுக்கு வேறு என்ன எடுத்துக்காட்டு வேண்டும்.

சுயராஜ்யம் பெற்றார்களல்லவா' காங்கிரசார், ஆகஸ்ட் புரட்சி செய்து—அந்த சுயராஜ்ய ஏற்பாட்டின்படி, இங்கு வேலை செய்து விலகிக் கொண்ட வெள்ளை அதிகாரிகளுக்கு பென்ஷன் கொடுத்து வருகிறார்கள், கப்பம் கட்டுகிறார்கள் என்று சொன்னால் மானக்குறைவு, எனவே பென்ஷன் என்று பெயர்!! இப்படித் தரப்பட்ட பணம் நாற்பதாயிரம் பவுன். இதற்கு வருமான வரி வசூலிக்க வில்லையாம்!

ஊழல்கள் இப்படிவளருகின்றன, உரத்த குரலில் 'தேசியம்' பேசி மக்களை ஏய்க்கும் வித்தை நடந்தபடி இருக்கிறது.

இடையிடையே காங்கிரஸ் ஏடுகள், வத்சுவுக்கு வரதன் — அலங்காரத்தங்கைக்கு அன்புள்ள அண்ணன்—புத்திமதி கூறுவது போல, பொறுமையைச் சோதிக்க வேண்டாம், கண்விழிப்பு வேண்டும், களங்கம் துடைக்கப்படட்டும், கம்யூனிஸ்டுக்கு இடம் தராதீர், என்று எழுதுகின்றன. அவர்கள் எழுதிய மை உலருவதற்குள் மற்றோர் ஊழல் முளைக்கிறது!!

ஏனென்று கேட்பவன் 'தேசத் துரோகி' ஆக்கப்படுகிறான்!

பாருக்குள்ளே
எங்கள் நேரு
ஆட்சி வெகு ஜோரு
என்றே நிதம் கூறு!

என்று 'தெந்தினம் பாடுகிறார்கள் 'தேசபக்தர்கள்'.

★

நிலையும்-நினைப்பும்

குலக்கொழுந்தே! குணாளா!

என்று

வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்!
பாராட்டுகிறோம்! பரவசமடைகிறோம்!

நமது கழகத் தோழர்கள் பலரும்
முதலமைச்சர்
காமராஜரை
கொண்டாடுகிறார்கள் குதூகலத்தோடு.

தூத்துக்குடி சதி வழக்கில்
நமது தோழர்கள்
வாடி வதங்கி நின்றுகொண்டிருக்கிறார்கள்.

1. அவர்களிடம் பரிவு காட்ட
2. வழக்கை வாபஸ் வாங்க
3. உயிரிழந்த குடும்பத்தாருக்கு கருணை காட்ட
4. கல்லக்குடி வழங்க

காமராஜரின் மனம்
இடந்தரவில்லை
இளகவில்லை

ஏன்? ஏன்? ஏன்?

நாம்
கொண்டாடுகிறோம் — அவர் வெற்றி கண்டு.
நாம்
வாழ்த்தி வரவேற்கிறோம் — அவர் செல்லுமிடமெல்லாம்.

அவர்?

வெட்கம் விலாவைக் குத்துகிறது.
வேதனை வெள்ளம் குமுறுகிறது.
வேற்றாரும் கேலி செய்கின்றனர்.

நேசக்கரம்
நீட்டுகிறோம்

பாசமும் பரிவும்
ஏற்படக் காணோம்!

தூத்துக்குடித் தோழர்களை
வழக்கு வாட்டி வதைக்கிறது!!

திராவிடநாடு

காஞ்சி] 26—9—54 [ஞாயிறு

பர்மா தரும் பாடம்

★

"ஹே! ராஜன்! நான் நடத்தப் போகும் யாககாரியத்துக்காகப் பணம் தேவைப்படுகிறது. காவலுக்கு உன்னையே நியமித்துள்ளேன். உடனேயாக காரியத்துக்குத் தேவையானவைகளைச் செய்து முடிப்பாயாக!" என்பார் ரிஷி; ராஜன் அடியற்ற நெடும்பனை போல் அந்த கமண்டலமேந்தியின் காலில் வீழ்ந்து வணங்கி, "கட்டளையைச் சிரமேற் கொண்டேன். கதி தரும் அண்ணலே! கடவுட் திரு உருவே! குருமகாராஜ்! இதோ சித்தமாக இருக்கிறேன்" என்று பயபக்தியுடன் கூறுவார்; பொக்கிஷம் கரையும், ஓமப்புகை சுருள் சுருளாகக் கிளம்பும்.

'மகான்கள்' மன்னரை, ஆட்டிப் படைத்தனர்.

மணிமுடி தரித்தோர் ஜெபமாலையினரிடம் மண்டியிட்டுக் கிடந்தனர்.

மன்னனை மகானின் ஆசி வேண்டும்; மன்னன் பதவி நிலைத்திருக்க மகானின் ஆதரவு தேவை.

மக்கள் கொண்டாடத்தக்க மகோன்னதமான காரியங்களைச் செய்தவனை இருக்கலாம், மாவீரனை மண்டிலம் பல வென்றிருக்கலாம், கோட்டைகளைத் தாக்கித் தகர்த்திருக்கலாம், வெற்றிக் கொடியை எட்டுத்திக்கிலும் பறக்க விட்டிருக்கலாம், எனினும், ஆரிய குருமார்களின் 'ஆக்ஞை'யைச் சிரமேற்கொள்ளத் தயங்கினால், முடி நிலைக்காது, பிடி இருக்காது, மன்னன் 'பாபி'யாக்கப்படுவான், குருவின் சாபம் அவனைத் தீண்டும், அவன் ஆளும் யோக்யதையை இழந்து விடுவான்.

இப்படி ஒரு காலம் இருந்தது!

மனைவியை விலைக்கு விற்று விட்டு சுடலை காத்திடச்சென்ற அரிச்சந்திரர்கள் வாழ்ந்த காலம்!

ஜெபமாலை அவ்வளவு ஆதிக்கக் கருவியாக இருந்த காலம்!

இங்கு மட்டுமல்ல!! எங்கும்!

ஐரோப்பா கண்டத்தில், இன்று அன்பு அருள், சமாதானம் சாந்தம், ஒழுக்கம் எனும் பண்புகளை உபதேசித்துக் கொண்டு, 'பக்த கோடிகளே', பாபப் பாதையில் செல்லாதீர் என்று அறிவுரை கூறிக்கொண்டிருக்கிறார் போப்பாண்டவர். ஆனால் 'அந்த நாட்களில்' போப்பாண்டவர்கள் இட்டதே சட்டம் என்ற நிலை இருந்தது. அரசர்கள் அடி பணிவர்! அச்சம் அவர்களைப் பிடித்தாட்டும்! போப்பாண்டவரின் கட்டளையை மீறும் துணிவு எந்த அரசனுக்கும் எழாது; எழின், அவன் அரசப் பதவியிலிருந்து விரட்டப்படுவான்; போப்பாண்டவர் அவனைப் 'பிரஷ்டன்' ஆக்கிவிடுவார்; போப்பாண்டவரின் சாபத்தைப் பெற்ற 'சண்டாளனை'ச் 'சம்ஹரிக்க' அவருடைய ஆசிபெற்றுக் கொண்டு வேறு அரசர்கள் கிளம்புவர்! அவ்விதம் ஒரு காலம் இருந்தது.

போப்பாண்டவரின் கோபத்துக்கு ஆளான ஓர் மன்னன், தன் தவறையும் நிலையையும் பின்னர் உணர்ந்து கழுவாய் தேடவும் அவர் கருணைக் கடாட்சம் பெறவும், மூன்று பகலும் மூன்று இரவும், தலையில் பாகை அணியாது, காலில் செருப்பு அணியாது, எளியோனைக் கோலம் கொண்டு, போப்பாண்டவரின் அரண்மனை வாயலில் இறைஞ்சிக் கொண்டிருந்தான். அரண்மனையா? அபசாரம், அபசாரம்! ஆலயம்!!

மதம் அந்த அளவுக்கு அரசியலில் ஆதிக்கம் செலுத்திவந்த நாட்கள் உண்டு.

அரசியல் அதிகாரமே, மதத்தைக் கட்டிக் காக்கவும், மதத் தலைவர்களின் கட்டளையை நிறைவேற்றவுமே இருக்கிறது என்ற தத்துவம் பேசப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட காலம்!

இதனால் ஏற்பட்ட இன்னல்களும் இழிதன்மைகளும் ஏட்டிலடங்கா!

புல்லரும் புரட்டரும் கொழுத்தனர், பொய்யும் வழுவும் மலிந்தன!

ஆட்சியாளர், தாசர்களாயினர், ஆட்டிப் படைப்போர் மதத்தலைவர்கள்.

இந்தக் கொடுமையைக் களைந்தெறிய, சில நூற்றாண்டுகள் பிடித்தன.

அரசியல் வேறு; மதம் வேறு; அரசியலில் மதம் ஆதிக்கம் செலுத்துவது அடாது என்ற கோட்பாடு பிறந்து, திட்டம் ஏற்பட, போர் பல நடைபெற வேண்டி இருந்தது. மதத் தலைவர்களின் வேலையில் மன்னர்கள் தலையிடுவதில்லை, மன்னரின் அதிகாரத்தில் மதத் தலைவர்கள் குறுக்கிடுவதில்லை என்று சமரசம் ஏற்பட்டது.

இகலோகம் இந்த மன்னர்களுக்கு, பரலோக சாம்ராஜ்யம் எம்மிடம் என்று கூறித் திருப்தி அடைவதாகப் பாவனை செய்தனர், தங்கள் ஆதிக்கம் இனிச் செல்லாது என்ற உண்மையை உணர்ந்துகொண்ட மதத் தலைவர்கள்.

எனினும் சமயம் கிடைக்கும் போதெல்லாம், மதத்தலைவர்கள், அரசியலில் ஆதிக்கம் பெற முனைகிறார்கள்.

மக்களாட்சி ஏற்பட்ட பிறகு, இது நடைபெற மார்க்கமில்லை என்பது தெரிந்திருந்தும், 'பலித்தவரையில் இலாபம்' என்ற முறையில், அரசியலில் தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்தப் பார்க்கிறார்கள்; பெரும்பாலான இடத்தில் தோற்கடிக்கப்படுகிறார்கள்.

சின்னாட்களுக்கு முன்பு பர்மிய முதலமைச்சர், மத ஆதிக்கக்காரர்களை இவ்வகையில் தோற்கடித்துத் தக்க பாடம் கற்பித்துவிட்டார். மதம் வேறு, அரசியல் வேறு — மதத்தலைவர்கள் அரசியலை ஆட்டிப்படைக்க எண்ணுவது அடாத செயல், அதனை நான் அனுமதியேன் என்று தீர்மானமாகத் தெரிவித்துவிட்டார்.

தீப்பொறி பறக்கும் கண்ணினராயினர், பர்மாவில் உள்ள புத்த பிக்ஷுக்கள்—பெருந்தலைகள்! பர்மிய சர்க்கார், நாட்டு நிலையையும் மக்கள் மனப் போக்கையும், காலக்குறியையும் கவனித்து கல்வி சம்பந்தமான ஓர் திட்டம் செய்தனர், அது தங்கள் கட்டளைக்கு மாறுபட்டது என்று காரணம் காட்டி, பர்மிய புத்த சாதுக்கள் போர்க் கோலம் பூண்டனர்.

பர்மா, புத்தரின் அன்பு மார்க்கத்தைத் தழுவிய நாடு.

புத்த மார்க்கம், ஆதிக்கத்தை அகற்றி, அன்புநெறியை ஏற்படுத்திய மாண்புமிக்க அறநெறியாகும்.

இந்த அறநெறி காண அரச போகத்தைத் துச்சமென்று உதறித் தள்ளிவிட்டு, உண்மையைக் கண்டறிய வாழ்நாளைச் செலவிட்டு, மக்கள் உய்வதற்கான வழி அறிந்துரைத்தார், புத்தர்.

வாளேந்திய மன்னர்கள் பலர் அவர் தாள் தொழ முன்வந்தனர்— அன்பினால் ஆட்கொள்ளப்பட்ட காரணத்தால்.

சீறிக் கிளம்பியவர்களெல்லாம் அவருடைய சிறு நகை கண்டு சொக்கினர், அவருடைய சீடராயினர்.

ஆட்டுக் குட்டியிடமும் அரசர்க்கரசனிடமும் ஒரேவிதமான அன்பு காட்டினார், அண்ணல்.

அவர் சட்டம் இயற்றி புத்த மார்க்கத்தைப் புகுத்தவில்லை.

கனி மொழி பேசினார், கட்டளை பிறப்பித்தாரில்லை.

மகிமைகள் கூறி, மாயாஜாலம் காட்டி அல்ல அவர் மண்டலாதிபதிகளை மண்டியிட வைத்தது.

அவர் உரையிலே உண்மையும், அவர் காட்டும் நெறியிலே புனிதத் தன்மையும் கண்டனர், அடிபணிந்தனர்.

அவர் பெயரால் இயங்கும் மார்க்கத்தின் இன்றையக் காவலராக உள்ள

சிலர், அவர் திருப்பெயருக்கே இழுக்கேற்படும் போக்கிலே நடந்துகொண்னர்—பர்மாவில்.

பர்மாவில், புத்தமார்க்கத்தினர் மட்டுமல்ல, இஸ்லாமியர் ஏராளமாக உள்ளனர்.

தங்கள் மார்க்கம் எவ்வளவு புனிதமானது என்று புத்தமார்க்கத்தினர் கருதுகின்றனரோ, அதே போலத்தான் இஸ்லாமியர் இஸ்லாத்தைக் கருதுகின்றனர்.

பர்மியநாடு, புத்தமடாலயம் அல்ல!! புத்தமார்க்கத்தினரும் இஸ்லாமியரும் கிருஸ்தவரும் வாழும் நாடு.

புத்தமார்க்கத்தினரின் ஆதிக்கத்திலேதான் பர்மா இருக்கும் என்று கூறுவது மக்களாட்சியின் மாண்பினையே மறுப்பதாக முடியும்.

இத்தகைய அச்சம் காரணமாகவே, பெரும்பாலும் கிருஸ்தவர்களே அதிகமாக உள்ள கரேனியர்கள் தனி அரசுக் கிளர்ச்சி நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

இது போன்றே இஸ்லாமியரும், புத்தமதக்காரரின் ஆதிக்கத்திலே நாடு சிக்கிவிடும், அதனால் தங்கள் மார்க்கத்துக்கும் கலாச்சாரத்துக்கும் ஆபத்து விளையக்கூடும் என்று கருதி, தனி இஸ்லாமிய ராஜ்யம் வேண்டும் என்று கோருகின்றனர்.

இவர்தம் அச்சத்தை மெய்ப்பிப்பது போல, புத்தமத சாதுக்கள், பர்மிய சர்க்கார் மீது பாயத் தலைப்பட்டனர்.

பர்மிய பள்ளிக்கூடங்களில் மத போதனை தேவை என்று பேசப்பட்டது—இங்கு போலவே!

பர்மிய முதலமைச்சர், மக்கள் போக்கையும் அரசியல் நிலையையும், ஜனநாயகப்பண்பையும் மனதிற் கொண்டு, பள்ளிகளில் புத்தமதபோதனை, இஸ்லாமிய மதபோதனை இரண்டுக்கும் ஏற்பாடு செய்தார். நியாய புத்தி படைத்த எவரும் இதை ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் புத்த சாதுக்கள் போர்க்கோலம் பூண்டனர்.

பர்மிய பள்ளிக்கூடங்களில் புத்த மத போதனைமட்டும்தான் இருக்க வேண்டும், இஸ்லாம் கூடாது என்று கட்டளையிடலாயினர்.

சர்க்கார் எல்லோருக்கும் பொது; புத்த மார்க்கத்தவருக்காக மட்டும் இருப்பதல்ல, இஸ்லாமியரும் பர்மா குடி மக்களாக உள்ளனர், அவர்களைப் புறக்கணிக்கமுடியாது என்று விடை அளித்தார், பர்மிய முதலமைச்சர்.

விடவில்லை, சாதுக்கள்! வீராவேசமாகக் கிளம்பினர்! கண்டனம் பொழிந்தனர்! மார்க்கம் நாசமாகிறது, புத்த மார்க்கம் அழிந்துபடுகிறது, முதலமைச்சர் மத விரோதியாகிவிட்டார், இஸ்லாமும் புத்த மதமும் ஒன்று என்று பேசும் 'பாபி'யாகிவிட்டார், என்று பேசவும் ஏசவும் தலைப்பட்டனர். பர்மிய முதலமைச்சர் இந்தத் தொல்லையே வேண்டாம் என்று, பள்ளிகளில் மத போதனையே வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்துவிட்டார். இது பேரிடியாகிவிட்டது, புத்தமதத் தலைவர்களுக்கு. எனவே, அவர்கள் பர்மிய சர்க்காருக்கு 'எதிர்ப்பு' ஏற்படுத்த முனைந்தனர்; மிரட்டலுக்கு அஞ்சுபவரல்ல என்பதைப் பர்மிய முதலமைச்சர் காட்டிவிட்டார்.

மதம் வேறு, அரசியல் வேறு; அரசியல் விவகாரத்தில் மதத் தலைவர்கள் தலையிட்டு ஆதிக்கம் செய்வதை நான் அனுமதிக்கப்போவதில்லை. பிடிவாதம் காட்டினால் பணிந்துவிடுவேன் என்று கருதி ஏமாறவேண்டாம்; முதலமைச்சர் பதவியை வேண்டுமானால் விட்டுவிடுவேன், கட்சித் தலைவர் பதவி கூடத் தேவையில்லை, ஆனால் முதலமைச்சராக இருந்துகொண்டு, 'ஜெபமாலைகள்' அரசியலில் கட்டளை இடுவதை நடத்திக்கொண்டு இருக்கமாட்டேன், என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

பெரியதோர் கொந்தளிப்பு மூண்டுவிடும், முதலமைச்சர் மிரண்டோடி வருவார், சரண் புகுவார், என்று எண்ணிய புத்த சாதுக்கள் ஏமாந்தனர். மக்களாட்சியின் மாண்பினை பர்மிய முதலமைச்சர் வெற்றி அடையச் செய்திருக்கிறார். பாராட்டுகிறோம்.

இந்தச் சம்பவம், இவ்வளவு அறிவுத் தெளிவுள்ள காலத்திலேயும், அரசுகளை ஆட்டிப் படைக்கலாம் என்ற எண்ணம் கொண்ட மதத் தலைவர்கள் சமயம் பார்த்துக்கொண்டு சாதுக் கோலத்தில் உள்ளனர் என்பதை விளக்கமாக எடுத்துக்காட்டுகிறது.

பள்ளிகளில் மதபோதனை என்ற திட்டம் எவ்வளவு வேதனையை விளைவிக்கக் கூடியது என்பதையும் இச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

மதத்தின் கைப்பாவையாக அரசியலை ஆக்கிவிட்டு, மீண்டும் புரோகித ஆதிக்கத்தைக் காணலாம் என்று மனப்பால் குடிக்கும் குல்லுகபட்டர்கள் இங்கு உள்ளனர்!

பர்மிய முதலமைச்சர் அத்தகையோருக்குத் தக்கபாடம் கற்பித்து விட்டார்.

இங்கோ......!!

★

விழா முடிந்ததும்!

மானே! மரகதமே! தேனே!
உனைக்கூடி
நானே பெறும் இன்பம் யாரே
பெற்றார் இங்கு!!

தெம்மாங்கு பாடினான் சாலையோரத்தில், மாலை நேரத்தில். இரவு. வீடு. எதிரே மனைவி, அவள் கண்களிலே நீர். வாய் உதிர்த்த முத்துக்களோ... அப்பப்பா...! தெம்மாங்கு பாடியவன், பெற்றது என்ன?

பாரதியார் விழா கொண்டாடப்பட்டது.

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது என்று கல்கி வர்ணித்திருக்கிறது.

பாரதியாரின் பாடல்கள் பாடப்பட்டன—அவை பற்றிய வீர உரைகள் நிகழ்த்தப்பட்டன—அருளாளரும் அரசியல் அலுவலாளரும், கதருடையாரும் வேதமோதிகளும், கூடினர், பாடினர், விழாக் கொண்டாடினர்.

தெம்மாங்கு பாடியவன் வீடுவந்தான்—வேதனையைக் கண்டான் விழா முடிந்தது இதோ வேதனைப் பட்டியல், வேற்றார் தருவதல்ல, விழா நடாத்திய 'கல்கி' தருவது.

இல்லையென்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்போம்

என்ற பாரதியாரின் வாக்கு இன்னும் நமது நாட்டிற்குள்ளேயே நிறைவேறவில்லை, விரைவில் நிறைவேறும் என்பதற்குரிய அறிகுறிகளும் காணப்படவில்லை.

போதிய அளவு பள்ளிக்கூடங்கள் இல்லை. இருக்கிற பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் போதவில்லை; ஆசிரியர்களுக்குச் சம்பளம் போதவில்லை.

கல்வியறிவு படைத்தவர்களுக்குப் போதுமான வேலையில்லை. வேலையுள்ளவர்களுக்குப் போதிய வருமானம் இல்லை.

நோய்ப்பட்டவர்கள் சிகிச்சை செய்து கொள்ளப் போதிய வைத்திய சாலைகள் இல்லை. பயிற்சி பெற்ற வைத்தியர்களும் இல்லை.

வறுமையின் கொடுமை பற்றியோ சொல்ல வேண்டியதில்லை.

இந்த 'இல்லை' ப்பட்டியல் தான் கிடைக்கிறது, விழாவுக்குப் பிறகு.

'இல்லைகளை' ஒழித்து இலட்சியங்களை நிறைவேற்றவாரீர், என்று

'கல்கி' அழைக்கிறார். யாரை? இந்த 'இல்லை'கள் தாக்கி, இடுப்பொடிந்தது களாய், இதயம் புண்ணானதுகளாய், உள்ள மக்களை அழைக்கிறார்.

பாரதியாரின் பாடலைப்பாடிப் பரவச மூட்டி, ஆளவந்தார்களாகி இருக்கிறார் களே 'கல்கி'யின் நண்பர்கள், அவர் கள் என்னசெய்தனர், 'இல்லை' போக, என்ன செய்வதாக உள்ளனர்இனியா கிலும்!

ஆண்டவனையும் அல்லற்படும் மக்க ளையும் அழைக்கிறார் இன்னலைப் போக்க. ஆளவந்தார்களோ, விழாக் கோலத்தில் உள்ளனர்.

வீணில் உண்டு கொழுத்து இருப்போரை
நிந்தனை செய்வோம்

என்று பாடியவர் கூடப் பாரதியார் தான்! நிந்தனைக்கு ஆளாக வேண்டி யவர்கள், வந்தனைக்குரியவர்களாகி விட்டார்கள், பாரதி பார்க்க விரும்பிய 'மணிக்கொடி'யைப் பறக்கவிடப் பல் வேறு கஷ்டங்கள் அனுபவித்த மக்கள்

பஞ்சமும் நோயும் நின்
மெய்யடியார்க்கோ

என்று பாடிப்பரதவிக்கிறார்கள், அவர் களைக் கேலி செய்வதுபோல

பாருக்குள்ளே நல்ல நாடு
எங்கள் பாரத நாடு

என்று கீதம் பாடுகிறார்கள் இன்பபுரி யினர்.

இலட்சியங்கள் நிறைவேறாத கார ணம், ஆளவந்தார்களுக்கு, இலட்சி யங்களை நிறைவேற்ற வேண்டும் என் பதிலே அக்கரையும் இல்லை, போது மான திறமையும் இல்லை.

'இல்லை' எனும் தொல்லை துடைக் கப்பட வேண்டுமானால் ஆட்சி முறை மாற்றப்பட்டாக வேண்டும் — விழாக் கொண்டாடுவோர் அதைக் கூறு வதற்கு அச்சப்பட்டுக் கொண்டுதான், எந்த மக்களை, பாரதி பாடலைப் படிக் கட்டுகளாக்கிக் கொண்டு பீடமேறிய தலைவர்கள், கைவிட்டு விட்டு, அல்லற் படவிட்டு வைத்திருக்கிறார்களோ, அவர்களையே அழைக்கின்றனர், 'இல்லை'யைப் போக்க, இலட்சிய வெற்றி பெற!

★

'ஞாபக மறதி'

என்னப்பா இது, இவர் மக்களை என்னவென்று எண்ணிக் கொண் டார், காங்கிரசைப் பற்றி எப்படி வேண்டுமானாலும் பேசட்டும். காங் கிரஸ் என்ற மாட்டுக்கு இப்போது நோய் கண்டிருக்கிறது, அந்தநோய் தீர மக்களாகிய நீங்கள் சூடு போட வேண்டும் என்று கேட்டுக் கொண் டார். அவருக்கு அந்த உரிமை இருக்கிறது. நாமும்கூட இதையே தான் சொல்லுகிறோம், கொஞ்சம் தெளிவாக — காங்கிரசுக்குக் கண் டுள்ள நோய் சூடு போட்டால் மட் டும் சரிசெய்து விடக்கூடியது அல்ல. பெரிய ரண சிகிச்சைக்குப் பிறகே பிழைக்காத அளவு நோய் முற்றிவிட்டது என்று. ஆனால் நண்பர்கள் நம் கூற்றை முற்றிலும் மறுத்து வந்தார்கள். நிலைமை நெடு நாட்களுக்கு அவர்களை அனுமதிக்க வில்லை அப்படிச் செய்ய. இப்போது அவர்களாகவே நோய் கண்டிருப் பதை ஒத்துக் கொள்ளத் தொடங் கியுள்ளார்கள். அதுவரையில் மகிழ்ச்சிதான், இனியாவது மர ணத்தை நெருங்கும் உடலிலிருந்து வெளியாகும் கெட்ட கிருமிகளுக்கு இரையாகாமல் தப்பி விடுவார்கள் என்பதால். அது எப்படியாவது போகட்டும், மக்களையல்லவா ஆரம் பப்பள்ளி சிறுர்கள் என்று எண்ணி விட்டார்......வகுப்பு நடத்த ஆரம் பித்து விட்டாரே.

எதைப்பற்றியப்பா இவ்வளவு ஆத்திரமாகக் குறிப்பிடுகிறாய் என்று குறுக்கிட்டேன்.

மாட்டுக்கு சூடு போடுவது போல் வாக்குச் சீட்டில் மாடு சின்னத் திற்கு எதிரே குறியிட்டு உங்கள் வாக்குகளைப்பதிவு செய்யுங்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்யும், சென்னை மாநில முதல்வர் தோழர் காமராஜ் குறிப்பிட்டுள்ளதைச் செய்தித்தாளில் சுட்டிக் காட்டி ஞன்.

விஷயம் ஒருவாறு புரிந்தது...... பிறகு அவனுக்குப் பதில் சொல்ல வேண்டாமா? இப்போது நடை பெறுகிற தேர்தலில் வாக்குப்பதிவு புதுமுறையானது, அதைத்தான் அப்படி மக்களுக்கு விளக்கிக் கூறி ஞர், என்றேன்.

அவன் விடவில்லை. இப்படித் தான் அதற்குச் சொல்ல வேண் டுமா? முறையை இப்படி இப்படி என்று சொல்லிவிட்டுப் போகிறது தானே என்ருன்.

சொல்லித்தான் பார்த்தார்கள். இருந்தும் நடைபெற்ற தேர்தல் களில் பதிவான ஓட்டுகளில் பல ஆயிரம் செல்லாதவைகளாகி விட் டன—முறைப்படி பதிவு செய்யப் படாததால். தங்கள் உரிமையை வழங்குவதிலே சாதாரண மக்கள் பல தவறுகளைச் செய்கிறார்கள். அவர்கள் கல்வியறிவு பெருதவர் கள், சாமான்யர்கள். ஆனால் நாடா ளச் சென்றுள்ளவர்கள் கூட, முறை புரியாமல், தங்கள் வாக்கு களைச் செல்லாதவைகளாக்கி விட்ட சாமான்யர்களினும் கீழாக நடந்து கொண்டிருப்பதாகச்செய்தி இருக்கிறதப்பா, என்றேன்.

நண்பன், நான் ஏதோ கற்பனை செய்வதாகக் கருதினான்.

23-9-54 தினமணியை எடுத்துக் கையில் கொடுத்து, மே-வங்க சர்க் காருக்கு எதிர்பாராத தோல்வி என்ற தலைப்பைக் காட்டிப் படிக்கச் சொன்னேன். செய்தி கீழே உள் ளது:

கல்கத்தா--செப். 22- மேற்கு வங்க சர்க்காருக்கு இன்று அசெம்பிளியில் முதன்முறையாக எதிர்பாராதவிதமாகத் தோல்வி ஏற்பட்டது. தங்கள் சர்க்கார் தோற்பதற்குக் காங்கிரஸ் மெம் பர்களே காரணமாய் இருந்தனர். ஏழு மந்திரிகளும், 30 காங்கிரஸ் மெம்பர்களும் போட்ட வோட்டு கள் எதிர்க்கட்சிக்குச் சாதகமாக விழுந்தன.

வோட்டுப் பதிவுசெய்யும் யந்தி ரத்தினால் ஏற்பட்ட வினை இது. 37 காங்கிரஸ் மெம்பர்கள் ஞாபக மறதியாக, தவருன பொத்தானை அமுக்கிவிட்டனர். அதனால் சாதகமாகப் பதிவாகவேண்டிய வோட்டுகள் பாதகமாகப் பதி வாயின. (தானியங்கி யந்திரத் தின்மூலம் வோட் பதிவு செய்யும் ஏற்பாடு இந்தியாவிலேயே இந்த அசெம்பிளியில் மாத்திரம்தான் உண்டு)

படித்து முடித்த நண்பன் நகைத் தான். ஓட்டுப் பதிவு செய்யவே ஞாபகமற்றவர்களின் கையில் நாடு சிக்கியுள்ளவரை செம்மைப்படுவ தேது? என்று பேசிக்கொண்டே போனான்.

சரி, சரி, காமராசர் பேச்சு என்ன வாயிற்று என்றேன்.

அவரை மேற்கு வங்கத்துக்கு உடனே அனுப்பிவைத்தால் நல்ல தாக இருக்கும் என்று கூறிக் கொண்டே சென்றுவிட்டான்.

★

வார்தா திட்டம் வருமாம்!

ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டம் ஒழிந்தது என்று குதூகலமடைந்திருக்கிறோம்.

அதை ஒழித்துக்கட்டிய மாவீரர் என்று காமராஜரைப் பாராட்டுகிறோம்.

இப்போது வார்தா கல்வித் திட்டம் புகுந்தப்பட இருக்கிறதாம்!

வார்தாகல்வித் திட்டம், அசல் வர்ணாஸ்ரமத் திட்டம், என்று பெரியார் உட்பட பேரறிஞர்கள் பலரும் கண்டித்துள்ளனர்.

வார்தா கல்வித் திட்டம், புகுத்தப்பட்டால், திராவிடம் சகித்துக்கொண்டிருக்காது என்பதை பெரியார் முன்பு வார்தா திட்டத்தைக் கண்டித்ததைக் கண்டவர்கள் அறிவர்.

திராவிடம் முழுமூச்சாக எதிர்த்த வார்தா கல்வித் திட்டத்தைக் காங்கிரஸ் மீண்டும் புகுத்தும் துணிவு எப்படி ஏற்படும் என்று நமக்குத் தோன்றவில்லை.

ஒருசமயம், கழகங்கள் கனிமொழி பேசுகின்றன, காதலால் செயலற்றுப் போய் விட்டன என்று காங்கிரஸ் பெருந்தலைவர்கள் கருதுகிறார்கள்போலும்!

தவறான கணக்கு! ஆபத்தான பரீட்சை!

சிறுபொறி பெரு நெருப்பாகும்!!

வார்தா திட்ட இலட்சண விளக்கத்துக்காக ஒரு சிறு குறிப்பு ஈண்டு தரப்பட்டிருக்கிறது.

காந்தியார் கல்வித் திட்டம் என்னும் வார்தா திட்டம், முக்கியமாக ஆரம்பக் கல்வியைப் பற்றியதே ஆகும். ஆனால் சகிண்டரி, கலாசாலைப் படிப்பைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள். அதாவது சிறுவர்களும் சிறுமிகளும் 7 வயது முதல் 14 வயது முடியக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்று காந்தியார் சொல்லுவதால் அது சகிண்டரி கல்வியையும் பொறுத்ததாகும். மற்றும் காந்தியார் அந்தக் காலத்துக்குள் அந்தந்த இடத்துக்குத் தகுந்த தொழில் கல்வியைக் கற்றுக் கொள்ளவேண்டும், இன்னும் பலவிதமான விஷயங்களையும் படித்துத்தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

தீர்மானங்கள்.

1. தேச முழுவதும் கட்டாய இலவசக் கல்வி 7 வருஷங்களுக்கு எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்கவேண்டும்.

2. எல்லாப் பாடங்களும் தாய் மொழியின் மூலமே கற்றுக் கொடுக்கவேண்டும்.

3. தேகத்தினால் செய்யக் கூடிய சாமான்களை உற்பத்தி செய்யக் கூடிய வேலையின் மூலமே கல்வி கற்பித்து, இடத்துக்குத் தக்க கல்வியின் மூலம் குழந்தையின் அறிவை எல்லா வழிகளிலும் வளர்க்க வேண்டும்.

4. உபாத்தியாயர்களுக்கு வேண்டிய சம்பளத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக இந்த முறையில் சம்பாதித்துச் சரிபடுத்திக்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த மேற்கண்ட தீர்மானங்களைக் கொண்டு வந்து முடிவு செய்த போது காந்தியார் வழக்கம்போல் வியாக்கியானம் செய்திருக்கிறார், நாலாவது தீர்மானம் வந்தபோது புரொபஸர் கே. டி. ஷாவும், அவரைப் பின்பற்றி கனம் டாக்டர் சுப்பராயனும் தங்களுக்கு அதில் நம்பிக்கையில்லை என்று தெரிவித்து விட்டார்கள், அதன் பேரில் காந்தியார் அந்தத் தீர்மானத்தில் 'கொஞ்சங் கொஞ்சமாக' (Gradually) *என்ற வார்த்தையைச் சேர்த்தார். அந்த வார்த்தையைப் போட்ட கருத்தானது 7 வருஷ காலத்தில் முதல் வருஷத்திலிருந்து மேல் வகுப்புகளுக்குப் போகப் போகச் சாமான்களை உற்பத்தி செய்து, விற்று உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் கொடுத்து விடலாம் என்றோ அல்லது இந்த 7 வருஷ திட்டப்படியே நாள் செல்லச்செல்ல, காந்திஜீயின் அசல் தீர்மானத்தில் கண்டபடி, 7, 8 வயதுக் குழந்தைகளும் சம்பாதிக்கும் திறமை பெற்று விடுவார்கள் என்றோ அர்த்தம் போலும்.*

அதாவது இந்தத்திட்டம் அவசியம் என்பதற்கு காந்தியார் காரணம் காட்டும்போது,

"Most of the boys were lost to the parents and to the occupation to which they were born"

"In this age those born to certain professions had forgotten them, taken to clerical careers, and were lost to the country side"

என்று காரணம் சொல்லி இருக்கிறார்.

("South Indian Teacher" *என்கின்ற பத்திரிகை நவம்பர் இதழ்)*

"பெரும்பாலான பையன்களைப் பெற்றோர்கள் இழந்தவர்கள் ஆகி விட்டார்கள்; அந்தப் பையன்கள் தங்கள் ஜாதி தொழிலை விட்டு விட்டார்கள்; எந்தத் தொழிலுக்குப்பிறந்தார்களோ அதாவது எந்தத் தொழில் செய்யும் குடும்பத்தில் பிறந்தவர்களோ அந்தத் தொழிலை விட்டு விட்டு குமஸ்தாக்களாகப் பலர் போயிருக்கிறார்கள்" என்று "உலகம் போற்றும் உத்தம மகாத்மா" திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

விவசாயம், தச்சு, கொல்லு வேலை, க்ஷவரத் தொழில், வண்ணான் தொழில், செருப்பு தொழில் இன்னும் எத்தனையோ தொழில் செய்பவர்கள் தற்காலப் போக்கை அறிந்து கொண்டு தாங்களும் முன்னேற்றமடைய முயற்சிக்கிறார்களே அதைத் தடுப்பதற்காகவா இந்தக் கொடிய திட்டத்தைக் காந்தியார் கொண்டு வந்திருக்கிறார் என்று கேட்கின்றேன். மேற்கண்ட தொழில்களில் ஒன்றுமே செய்யாமல் உடம்பு நோகாமல் வயிறு வளர்த்துக் கொழுத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் எல்லோரும் எல்லா உத்தியோகங்களிலும் அமர்ந்து இந்திரபோகம் அநுபவித்துக் கொண்டிருப்பதற்காகவா இந்தப் பாழாய்ப்போன திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார் என்று கேட்கின்றேன். இது பழைய வருணாச்சிரம தர்மத்துக்கு அடிகோலுவதல்லவா என்று கேட்கின்றேன்.

இந்த உண்மையை உணராத சில கயவர்கள் காந்தி திட்டத்தை ஆதரித்துப் பார்ப்பனரல்லாத மக்களுக்கும் நாட்டுக்கும் பெருங்கேடு சூழப் பார்க்கிறார்கள். இன்னொரு முறை வார்வதா தீர்மானத்துக்குத்

தகுந்தபடி சில பிரகஸ்பதிகள் சேர்ந்து கொண்டு போட்டிருக்கும் பாடத்திட்டத்தைப்பற்றி ஆராய்கிறேன்.

தற்காலக் கல்வி முறைப்படி யார் எந்தத் தொழில் செய்யப் பிறந்திருந்தாலும், எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும் வேறு துறைகளில் அவருக்குத் தன்னுடைய திறமையைக் காட்ட வசதியிருக்கிறது. ஆங்கில அரசாங்கம் ஏற்பட்ட பிறகே இரட்டை ஆட்சியில் சர்க்கார் அதிகாரிகள் செய்த சட்டங்களால் ஒரு பார்ப்பானும் ஒரு "பறைய"னும் சேர்ந்து படிக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. பார்ப்பனர்கள் 'தாழ்ந்த ஜாதியாருக்கு' வணங்கி நடக்கும்படியாக ஏற்பட்டிருக்கிறது. வர்ணாச்சிரம அதர்மம் ஏற்பட்டால் தவம் செய்யும் ஒரு தமிழன் கொலையுண்பான், குரு பக்தி கொண்ட ஒரு ஏகலைவனுடைய கட்டை விரலை ஒரு கொலை பாதகத்துரோணன் வெட்டி வாங்குவான்.

இன்னும் பிள்ளைகளெல்லாம் சாமான்களை உற்பத்தி செய்வதில் தங்களது நேரத்தைச் செல வழிக்கலாம் என்று சொல்லப் படுகிறது. இந்தக் காலத்திலேயே எத்தனையோ தொழிலாளிகள் தொழில் செய்யமுடியாமல் வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப்படுகிறார்கள். வார்தா முறைப்படி இன்னும் அந்தப் பட்டாளம் பெருகும்படி நேரிடும். மற்றொரு விஷயம், இந்தக் காலத்தில் இயந்திரங்களைக் கொண்டு ஏராளமான சாமான்களை குறைந்த நேரத்தில் உற்பத்தி செய்து மலிவாகக் கொடுக்கமுடியுமாதலால் மக்கள் கையால் எவ்வளவு நீண்டகாலம் கஷ்டப்பட்டுச் சாமான்களை உற்பத்தி செய்து அதிக விலைக்கு விற்று எப்படி உயிர் வாழ முடியும் என்பதையும் கவனிக்கவேண்டும்.

ஒரு மாணவன் எதைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து முழு வரலாற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. உதாரணமாக ஒரு தக்ளியைப் பார்த்தால் அது என்னவென்றும், எங்கு செய்யப்படுகிறது என்றும் தெரிந்துகொள்ளவேண்டுமாம். பஞ்சை எடுத்துக் கொண்டால் அது எங்கு விளைகிறது, எப்படிவிளைகிறது, எப்படிப்பட்ட மண் வேண்டும், என்பன போன்ற கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் தற்கால மாணவன் மோட்டார்கார், ஆகாயவிமானம், சினிமா, ரயில்வே, ரேடியோ மின்சாரம் இவைகளைப்பார்த்து இவற்றின் வரலாற்றைஅறிந்து கொள்ளவும் அநுபவிக்கவும் ஆசைப்படுவானே யொழிய விருப்பமில்லாதவைகளைப் பற்றி ஒன்றும் ஆராயமாட்டான்.

இந்தத் திட்டப்படி கல்வி தன் செலவைச் சரிப்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும், சிறந்த கொள்கையென்று சொல்லப்படுகிறது. இந்த யோசனை தற்கால உலகத்துக்கு உதவாக்கரையானது.

முக்கியமான தொழில், தாய் பாஷை, கணக்கு, சமூகப்பாடங்கள், பொது விஞ்ஞான அறிவு, படம் வரைதல், சங்கீதம், ஹிந்துஸ்தானி என்ற பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுமாம். ஆனால் ஒவ்வொன்றையும் பற்றி ஆழ்ந்த அறிவு பெருக வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு நாளும் பாடங்களுக்குக் கொடுக்கும் நேரத்தைப் பார்த்தால் எதிர்பார்க்கும் அளவு அசாத்தியம் என்றும் தெரியும். கைத்தொழிலுக்கு மாத்திரம் 3 மணி 20 நிமிஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்கள் இவ்வளவு நேரம் உழைப்பதாயிருந்தால் சமூகத்தின் நிலைமை என்னவாகும்? தேகாப்பியாசத்துக்கு 10 நிமிஷம் உண்டு. இதன்படி எல்லாரும் சாண்டோக்கள் ஆகிவிடுவார்களா? சங்கீதம், படம் வரைதல், கணக்கு இந்த மூன்றுக்கும் 40 நிமிஷம் போதுமா? இந்த நேரத்தில் எவ்வளவு படித்துக் கொள்ள முடியும்?

பழமையை மதித்து அதன் பெருமையைக் காப்பாற்றவேண்டும், அதே சமயத்தில் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சிகளை அறிந்து கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது எப்படி முடியும்? 'எனக்கு மதம் இல்லை' என்று சொல்லிவிட்டுப் பெண்சாதி பெற்றோர் இவர்களின் எலும்பைக் கங்கையில் போடுவதா? ஆங்கிலம் படித்துப் பல பட்டங்களும் பெற்று ஊரை ஏமாற்றுவதற்காக மேல் நாட்டுக்குப் பிரயாணம் செய்யும் போது களிமண்ணும் கங்கை நீரும் கொண்டு போவதா? வைத்திய சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்துவிட்டு அத்துடன் மாட்டு மூத்திரத்தையும் சாணியையும் சேர்த்துக் குடிப்பதா? வான சாஸ்திரம் படித்துவிட்டுக் கிரஹண தினத்தில் 'புண்ணிய தீர்த்தங்கள்' முழுகுவதா? அஹிம்சையின் பேரால் பணக்காரர்களை ஆதரித்து ஏழைகளை வதைத்து 'ரிஷி' பட்டம் பெறுவதா? என்று தெரியவில்லை.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் எந்தக் காலத்திலும் நமது தேசம் அந்நியருக்கு அடங்கியிருக்கவே நேரிடும். ஆனால் பார்ப்பானுக்குப் பஞ்சமில்லை. நிர்வாக உத்தியோக மெல்லாம் அவன் கையிலிருக்கும், கோவில் குளங்களெல்லாம் அவன் சொத்தாயிருக்கும், நம்முடைய வீட்டு அரிசி, உப்பு, புளி, மிளகாய், பருப்பு, காய்கறிகள் எல்லாம் அவன் வயிற்றிலிருக்கும், நம்முடைய காசில் வாங்கிய ஜவுளி அவன் மானத்தைக் காப்பாற்றும், என்பதைத் தவிர வேறு பலன் இல்லை.

இந்த மோசமான திட்டம் பெண் மக்களை எந்தக் காலத்திலும் அடிமைகளாகவே வைத்திருக்கும். 4-வது, 5-வது வருஷத்தில் பெண்களுக்குச் சிறிது மாறுதலுடனே பாடம் கற்பிக்கப்படும் என்றும், 6-வது, 7-வது வருஷங்களில் 'குடித்தனப்பாங்கைப்' பற்றியே கற்றுக்கொடுக்கப்படும் என்றும் சொல்லப்படுவதால் மறுபடியும் பெண்கள் ஆண்களின் போகத்துக்கும் பிள்ளை பெறவும் கருவிகளாகவே இருப்பார்கள் என்று தெரிகிறது. இதனாலும் நமது தேசத்தின் முன்னேற்றம் பெரிதும் தடைப்படும்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

மனிதன் மாறிவிட்டான்!

[நக்கீரன்]

"ஏ! மிருகமே! நீ இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் இப்படியே இருக்கப்போகிருயோ தெரியவில்லையே!!"

"உன்னுடைய இந்த மிருக நிலையைக் கண்ட பிறகு என்னுல் எப்படி வாளா இருக்கமுடியும்?"

"நீ இப்படி மிருகமாய்த்தான் இருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!

"நானும் எனது சகாக்களும் உன்னுல் எவ்வளவோ நன்மைகளை அடையலாம் என்று எதிர்பார்த்தோம்—ஏமாந்தோம்!"

"எனக்கே கூட நீ இன்னும் மிருகமாய்த்தான் இருந்துகொண்டிருக்கிருய் என்பது தெரியவில்லை. என்னுடைய சகாக்கள் உன்னுடைய மிருக நிலையை எடுத்துக் கூறிய பிற்குதான், குற்றத்தைக் கண்டறியும் கூரிய விழியைத் திறந்தேன் — நீ மிருகமாகவே இருப்பதைக் கண்டேன்—கவலை என்னைக் கப்பிக்கொண்டது — காப்பி கூடச் சாப்பிடமுடியவில்லை! தவறு! தவறு!! மன்னிக்கவும்! நான்தான் காப்பி சாப்பிடுவதில்லையே! என்னுடைய உணவுகளான பால், பழம், பஞ்சாமிர்தம், சித்ரான்னங்கள் ஆகிய சிற்றுண்டி பேருண்டி எதிலும் என்மனம் செல்லவில்லை. நீ மிருகமாக இருக்கும்வரை எனக்கு இப்படிப்பட்ட உணவுகூடக்கிடைக்காதே! எனக்குக் கிடைத்தால்தானே என்னுடைய சகாக்களுக்கும் கிடைக்கும்—அவர்கள் என்னை நம்பி வாழ்பவர்களாயிற்றே! என்பதை எண்ணியவுடன் என் தலை சுழன்றது, மயக்கம் போட்டுக் கீழே விழுந்துவிட்டேன். விழித்துப் பார்த்தபொழுது என் சம்சாரம் என்னை அணைத்தபடி என்பக்கத்தில் அமர்ந்திருக்கக் கண்டேன்"

★

"இப்படியெல்லாம் உண்ணுமல் உறங்காமல் ஒரே கவலையாக இருந்தால் உடம்பு என்ன ஆகும்?"

"என்ன செய்வது எனக்கு ஏற்பட்டுள்ள கவலை அப்படிப்பட்டது!"

"என்ன அப்படிப்பட்ட தீர்க்க முடியாத கவலை ஏற்பட்டுவிட்டது உங்களுக்கு?"

"அதை ஏன் கேட்கிறே! நான் ஒன்று நினைக்க அது ஒழிந்து இன்னென்ருகிவிட்டதே என் பிராண நாயகி! நான் என்ன செய்வேன்?"

தாங்கள் நினைத்த ஒன்று வேறொன்ருக மாறிவிட்டதென்று கூறத் தங்களுக்கே வெட்கமாக இல்லையா? நினைத்ததை நினைத்தபடியே செய்யும் ஆற்றல் வாய்ந்த தங்களுக்கா இந்தக்கதி ஏற்பட்டு விட்டது?"

"அப்படித்தான் ஏற்பட்டுவிட்டது. எனக்கும் எனது சகாக்களுக்கும் ஒரு நிரந்தரமான வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணிச் செய்யப்பட்ட காரியம் ஒன்று கவைக்குதவாததாகிவிட்டது."

"அப்படி என்ன காரியம் செய்தீர்கள்? ஏன் அது பயனற்றுப் பாழாயிற்று?"

"என்னையும் தன்னையும் அறிந்து, என்னையும் எனது சகாக்களையும் என்றைக்கும் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணத்தோடு செய்யப்பட்ட காரியத்தில் மண்விழுந்து விட்டது"

"என்ன இது? தாங்கள் கூறுவது ஒன்றும் புரியவில்லையே! சிறிது விளங்கக்கூறலாகாதா?"

"விளக்கமா தேவை? விளக்கம் விணுகி விடுமே என்று அஞ்சுகிறேன்".

"அஞ்சற்க! தங்களுடைய சுக துக்கங்களில் பாதியை ஏற்பவள் நானல்லவா? தங்களுக்கொரு ஆபத்தென்ருல், அது எனக்கு வந்தது போலில்லையா? அச்சம் விடுத்து அருளுக! தங்களில் பாதியாம் என்னுல் ஏதாவது செய்யமுடிகிறதா என்று பார்க்கிறேன்."

"வீண்முயற்சி, என்ருலும் சொல்கிறேன். என்னையும் உன்னையும் இன்னும் எங்களைச் சேர்ந்தவர்கள் எல்லோரையும்காப்பாற்றயாராவது ஒருவர் தேவையல்லவா என்ற எண்ணத்தோடு **"மனிதன்"** என்ற பெயரோடு ஒரு வடிவத்தைப் படைத்தேனல்லவா"

"ஆமாம்! படைத்தீர்கள். எனக்கும்தெரியுமே! இப்பொழுது அவன் தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற மறுக்கிருனு என்ன!"

"மறுக்கவில்லை! மந்தியாக அல்லவோ இருக்கிருன்."

"விளங்கவில்லையே!"

"அவன், தன்னை இன்னுர்என்று அறியமுடியாத விலங்கு நிலையில் இருக்கிருன். அப்படிப்பட்டவன் எங்கே எம்மை அறிந்து எப்பொழுதுமே எங்களைக் காப்பாற்றப் போகிருன்?"

"நாதா! ஒரு யோசனை!"

"என்ன, உன் யோசனை? கூறு, பார்க்கலாம்."

★

"வருகிறீர்களா இன்று மாலை காட்டுவழியாகச் சிறிது தொலைவு சந்தோஷமாகப் போய்வரலாம்."

"காட்டுக்குப்போவதற்கும் நீ கூற இருக்கும் யோசனைக்கும் என்ன சம்பந்தம்?"

"இன்றைக்கு மட்டும் நான் சொல்கிறபடி கேளுங்களேன்! ஆணும் பெண்ணும் சரிநிகர்.சமத்துவம் என்பதாவது இதிலிருந்து தெளிவாகட்டுமே!"

"சரி! கேட்டுத் தொலைக்கிறேன்—வா போகலாம் காட்டுக்கு"

★

"அதோ நிற்கின்றனவே, இரு பெரிய உருவங்கள்! அவ்வ தம்மின் பெயரென்ன?"

அவைதான் காட்டில் வாழும் விலங்கினங்களுள் மிகப்பெரிய மிருகங்கள்—பெயர் யானை—ஒன்று ஆண், மற்றது பெண்."

"அப்படியா? சரி வாருங்கள் இன்னும் சிறிது தொலைவு போய் வரலாம்."

"சற்று நில் பார்வதி! எனக்கு என்னமோ மாதிரி வருகிறது"

"என்ன? இவ்வளவு தொலைவு நடந்துவந்ததால்ஏற்பட்டகளைப்பா?

"இல்லை, இல்லை! அதோ பார் அந்தக் கரியையும் பிடியையும்!"

"காட்டில் வாழும் விலங்குகள் அப்படித்தான் இருக்கும் அவைகளுக்கு இரவு பகல் என்ற வித்யாசமோ மற்றவர்கள்பார்த்துவிடுவார்களே என்ற அச்சமோ கிடையாது. வாருங்கள் போகலாம். இதைப் பார்ப்பதற்காகவா, நான் தங்களை அழைத்து வந்தேன்?"

"எனக்கென்னமோ அப்படித்தான் தெரிகிறது. அதோ பார்! அந்தப்பிடி அந்தக் கரியின் தும்பிக்கையைப் பிடித்து இழுப்பதை!"

"சரி சரி! வாருங்கள் போகலாம்"

"முடியாது"

"முடியாதா"

"அப்படியென்றால்!"

"நான் கரி! நீ பிடி"

"போங்கள் நாதா! வந்த இடத்தில் கூடவா இப்படி......!"

கோபிக்காதே உமை! உண்மையைக் கூறிவிடுகிறேன். முன்பொரு சமயம் நான்மட்டும் தனியாக இந்தக் காட்டுப்பக்கம் வந்திருந்தேன். அப்போது ஒரு கரியும் பிடியும் கனநேரம் இப்போதிருப்பதைப் போல் இருந்ததைக் கண்டேன். அதிலிருந்து எனக்கும் அப்படியிருக்க வேண்டும் என்ற பெரு விருப்பம் உண்டாயிற்று. ஆனால், அதற்குரிய சமயம் வாய்க்கவில்லை, இன்று அந்த விருப்பத்தை நிறைவேற்றலாம் என்று எண்ணினேன் —அவ்வளவுதான்"

நினைத்தது பலித்தது என்ற மன மகிழ்ச்சியோடு பரமசிவனின் விருப்பத்தை நிறைவேற்றும் அறிகுறியாகத் தன்னுடைய மௌனப் புன்னகையை மகேசன்பால் அள்ளி வீசினாள் மலையரசன் பெற்றெடுத்த மங்கையர் திலகம்.

உடனே பரமசிவன் கரியானார். பார்வதி பிடியானாள். இருடி பிண்டம் இராத்தங்காதல்லவா? உடனே பிறந்தார் பிள்ளையார்! பார்த்தாள் பார்வதி! பரவசமடைந்தாள். ஆயாசத்தோடு அயர்ந்து படுத்திருந்த அம்பலவாணனைத் தட்டி எழுப்பி,

"இதோ உங்கள் எண்ணம் ஈடேறிவிட்டது. இனி நாம் கவலையற்றிருக்கலாம். வாருங்கள் போகலாம் கைலாயத்துக்கு"

"என்னுடைய எண்ணம் ஈடேறி விட்டதா? எப்படி?"

"அதோ! எங்கள் இருவரின் அரிய முயற்சியாலும் அற்புத யோசனையாலும் அவதரித்த நம்முடைய குழந்தையைப் பாருங்கள்!"

"பார்ப்பதற்கே அருவருப்பாக வன்றோ இருக்கிறது பார்வதி!"

"அருவருப்பா? தங்கள் கவலை அதோடு அகன்றுவிட்டது என்று பொருள்"

"எப்படி?"

"மனிதன்" என்ற பெயரோடு மிருகநிலை பெற்றிருக்கிறான் என்று யாரைக் குறிப்பிட்டீர்களோ, அவனுக்கு மெய்யறிவு புகட்டி, அவனால் "நாம்" வாழ்வதற்கே இந்த அமைப்போடு இந்தக் குழந்தை பிறந்திருக்கிறது — பெற்றெடுத்திருக்கிறேன், என்னுடைய யோசனையின்படி"

"இந்த வடிவம் அந்த மனிதனுக்கு எப்படி மெய்யறிவை உண்டாக்கும்?"

"தாங்கள் தினசரிப் பத்திரிகைகளைப் படிப்பதில்லையா?"

"ஒன்று விடாமல் படிக்கிறேன்; ஆனால் இன்றுபோல் சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில்தான் தவறிவிடுகிறது"

அப்படியானால் 4—9—54-ல் வெளிவந்த "தினமணி"யை மீண்டும் ஒரு முறை எடுத்துப்பாருங்கள். அதில் மூன்றாவது பக்கத்தில் "விநாயகர் தத்துவம்" தலைப்போடு ஒரு செய்தி வந்திருக்கிறது"

"ஆமாம்! பார்த்தேன். அதில்

> மிருக நிலையை யானைமுகமும், கால்கள் மனித நிலையையும், கைகள் தெய்வ நிலையையும் குறிக்கின்றன. மனிதன் மிருகத் தன்மையில் இருந்து மனிதத் தன்மையை அடைந்து பின் தெய்வத் தன்மையை அடைகிறான் என்பதையே விநாயக வடிவம் விளக்குகிறது.

என்று வெளிவந்திருக்கிறது"

"மிருக நிலையில் இருக்கும் மனிதனை, உண்மையான மனிதனுக்கும் ஆற்றல் இந்த வடிவத்துக்கு உண்டு என்பதை இப்போதாவது ஒப்புக் கொள்கிறீர்களா?"

'ஒப்புக்கொள்கிறேன். ஆனால்... ....!

"ஏன் ஆனால் என்று ஒருமாதிரி இழுக்கிறீர்கள்?"

"வேறொன்றுக்கு மாகவல்ல, இப்படியெல்லாம் பார்வதியும் பரமசிவனும் ஆபாசமாக நடந்துகொண்டார்களே என்று மிருக நிலையில் இருந்து மெய்யுணர்வு பெற்ற மனிதர் நினைத்தால் என்ன செய்வது என்ற சந்தேகம் தவிர வேறொன்றுமில்லை"

"ஏன் சந்தேகம்? அப்படி நாம் என்ன ஆபாசமாகவா நடந்து கொண்டோம்?"

"நான் கரியாகி நீ பிடியாகி நடந்து கொண்ட காரியத்தைத்தான் குறிப்பிட்டேன்"

"ஓ! அதுவா? அதற்கும் நான் ஒரு வழி வகை செய்துதருகிறேன் வாட்டப்படாதீர்கள். நம்முடைய ஞானப்பாலை உண்டு நம் புகழ் பரப்பும் ஞானசம்பந்தனிடம் கூறி

> பிடியதன் உரு உமைகொள
> மிகு கரியது,
> வடி கொடுதன தடி-
> வழி படும் அவரிடர்,
> கடி கணபதி வர
> அருளினன் மிகுகொடை,
> வடிவினர் பயல் வலிவலம்
> உறை இறையே

என்றொரு பதிகத்தைப் பாடச் செய்துவிடுகிறேன். மேற்படி பதிகத்திற்குப் பக்தி எனும் மூலாம் பூசப்படுவதால், பதிகத்தின் உள்ளே பொதிந்துகிடக்கும் உண்மை வெளிக்குத் தெரியாது. பகுத்தறிவுக் கண்களுக்கன்றிப் பக்திக் கண்களுக்கு அந்த உண்மை தெரியாது. எனவே, தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம்"

"இருந்தாலும், இந்தக் காலத்தில்பக்திக்கண்களைவிடப்பகுத்தறிவுக் கண்கள்தான் அதிகம் என்பது உனக்குத் தெரியாது போலும்!"

"தெரிந்துதான் இருக்கிறேன். பக்தி உள்ளத்தைவிட பகுத்தறிவு உள்ளங்கள் அதிகமாக இருந்தாலும், அதுகளின் குரல் அவ்வளவாக எல்லோருக்கும் எட்டுவதில்லை."

"எவ்வளவோ கஷ்டப்பட்டுமனித மிருகத்தை உண்மையான மனிதனுக்கும் அரும்பெரும் காரியத்தைச் சாதித்த உன்னால் இந்த உண்மையைக் கண்டுபிடிக்க முடியவில்லையே என்பதை எண்ணும்போதுதான் எனக்கு உன்பால் இரக்கம் உண்டாகிறது. தினசரிப் பத்திரிகைகளை ஒழுங்காகப் படிக்கிறீர்களா என்று என்னைக் கேட்ட நீயே அந்தப் பத்

திரிகைகளைச் சரிவரப்படிப்பதில்லை என்பது தெரிகிறது.”

“எப்படி?”

“எனக்கு விளக்கம் அளிக்க நீ குறிப்பிட்ட தினமணிப் பத்திரிகையில், அதே நாளில், அதே பக்கத்தில் இன்னொரு செய்தியும் வெளிவந்திருக்கிறது. அதில்,

> ஜில்லாபோர்ட்டில் இருக்கும் 3500 ஆரம்ப ஆசிரியர்களில் 1000 பேருக்கு மேல் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது, ஒரு ஆதாரமற்ற செய்தியல்ல, தஞ்சாவூர் மாவட்ட ஸ்பெஷல் ஆபீஸர், அந்த மாவட்டத்தில் மட்டும் உள்ள கடவுள் நம்பிக்கையற்ற ஆசிரியர்களின் தொகையைத் தரும் அதிகார பூர்வமான அறிக்கையாகும். இதிலிருந்து பக்தியைவிடப் பகுத்தறிவுக்கே மக்கள் அதிக ஆதரவு தருகிறார்கள் என்பது விளங்கவில்லையா? மிருக நிலையில் இருந்து மனித நிலைக்கு மாறிய மக்கள் இப்போது உன்னுடைய எண்ணத்தில் மண்போட்டு வருகிறார்கள் என்பதுமட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.”

“இருந்தாலும் என்னுடைய இந்த முயற்சி வெற்றி பெறும் என்பதில் எனக்கென்னவோ இன்னும் நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. எத்தனையோ பக்தர்கள் எம்புகழ் பரப்ப எவ்வளவோ அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்ற உண்மை தங்களுக்குத் தெரியாது போலும்!”

“தெரியும்! தெரியும்!! அரசியல் தலைவனிலிருந்து அவனி சுற்றும் ஆண்டி வரை பலர் இந்த நல்ல காரியத்துக்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பதை அறிய முடியாத கபோதியா நான்?”

“அறிந்தபிறகுமா இப்படிக் கூறுவது?”

“அறிந்து தான் கூறுகிறேன்—என்னையும் உன்னையும் எங்கள் சகாக்களையும் காப்பாற்ற ஒரு ஆள் தேவை என்று நான்பட்ட கஷ்டமும் அடைந்த துன்பமும் உனக்கென்ன தெரியும்? நீ ஏதோ இந்த விநாயகரைப் பெற்றுவிட்டதாலேயே எல்லாம் தீர்ந்து விட்டதென்று பாவம் கனவு காண்கிறாய்! உனக்கு ஒருஉண்மை தெரியுமோ?”

“என்ன அந்த உண்மை?”

“மிருக நிலையிலிருந்து மனிதத் தன்மையைப்பெற்றுவிட்ட அந்த மனிதனைப்பற்றி நானும் நீயும் புகழ்ந்து பேசி, இனி நமக்குக்குறையேதும் இல்லை, நம்மைக் காப்பாற்றும் பொறுப்பும்கடமையும் அவனுடையதாகிவிட்டது என்று களி பேருவகை அடையும் நம்மைப் பார்த்துக் கேலி செய்த வண்ணமன்றோ இருக்கிறான் அந்த மெய்யுணர்வு பெற்ற மனிதன்!”

“நம்மைப் பார்த்துக் கேலி செய்கிறானா, ஏன்?”

“அவனை நாம் படைக்கவில்லையாம். அவனுடைய சொந்த முயற்சியால்தான் அவன் மனிதனானானாம். மெய்யுணர்வோடு கூடிய மனிதனைப் படைக்கும் ஆற்றல் நமக்கு (கடவுளுக்கு) இல்லையென்று திட்டவட்டமாகக் கூறுகிறான்.”

“கண்ணிருந்தும் பார்வையற்ற கசடனா அவன். நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் மண்ணில் பிறக்கிறார்களே! அவர்களெல்லாம் யாருடைய படைப்பாம்?”

“அது மனிதனுடைய சொந்தத் தனி முயற்சியாம். கடவுளின் கடாட்சத்திற்கும் கருவுற்பத்திக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று மறுக்கமுடியாத ஆதாரங்களோடு ஆணித்திறமாகக் கூறுகிறான்.”

“முட்டாள்! மடையன்! நன்றி கெட்டவன்! போக்கிரி!”

“பதட்டமாகப்பேசாதே பார்வதி! பக்கத்தில் விநாயகர் இருந்து கேட்டுவிடப் போகிறார். என்னால் பக்குவமடைந்த மனிதனையா முட்டாள் மடையன் என்றெல்லாம் திட்டுவது என்று உன் பிள்ளை கோபித்துக் கொள்வான்”

“அவன் கோபித்தால் எங்காவது குளத்தங்கரைக்குப் போகட்டும், கவலையில்லை.

குளத்தங்கரைக்கா? ஒரு வேளை போனாலும் போய்த் தொலைந்துவிடும்; அப்படியெல்லாம் வாய்த்துடுக்காகப் பேசிவிடாதே!”

“பேசாமல் எப்படி இருக்க முடியும்?”

“முடியாதுதான்! ஆனால் நிலைமையை நமது விநாயகத்தால்கூடச் சமாளிக்க முடியாதுபோல் தெரிகிறதே!”

“என்ன அப்படிப்பட்ட சமாளிக்க முடியாத சிரமமான நிலைமை இப்போது ஏற்பட்டுவிட்டது?”

“மெய்யுணர்வு பெற்று விழிப்படைந்த மனிதன், தன்னையும் எம்மையும் (கடவுளையும்)மட்டும் அறிவதோடு நின்றுவிடவில்லை. அவன் ஆதி அந்தம் இரண்டையும் எட்டிப் பார்க்கும் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டான். ஆதியில் மனிதன் எப்படித் தோன்றினான்? தோன்றினானா? தோற்றுவிக்கப்பட்டானா என்றெல்லாம் ஆராய்ந்து முடிவுகட்டிவிட்டான்”

“முடிவுகட்டிவிட்டானா? என்ன, எப்படி அந்த முடிவு?”

“நான் முன்னரே எடுத்துக் கூறியபடி மனிதனை நான் (கடவுள்) படைக்கவில்லை. அவன் குரங்கில் இருந்து படிப்படியாக மனிதனாக மாறி, மகேசனும் என்னைக் கூட அவன்தான் படைத்ததாகப் பலப்பல ஆதாரங்களைக் காட்டிக் கூறுகிறான்.”

“கடவுளராம் எங்களை மனிதன் படைத்தானா? எந்த ஆதாரத்தின் மீது இதனை அவன் கூறுகின்றான்”

“ஆதாரம் அநேகம் உண்டாம்! சாம்பிளுக்கு ஒன்றை மட்டும் என்னிடம் சொன்னான்”

“தங்களிடமா? அவ்வளவு தைரியம் பிறந்துவிட்டதா அவனுக்கு? என்ன சொன்னான் தங்களிடம்?”

மனிதனாகிய நான் குரங்காக இருந்தபோது மகேசனாகிய நீர் எங்கே என்ன செய்துகொண்டிருந்திர் என்று ஒரு கேள்விக் கணையைப் பூட்டினான். என்னால் அந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை — திகைத்துப்போனேன்!”

“திகைத்துப் போனீர்களா? ஏன் கைலாயத்தில் இருந்தோம் என்று கூறுவதுதானே!”

கூறினேன்—இதைப்போல் இன்னும் பலப்பல கூறினேன். அவன் விட்டபாடில்லை—கைலாயத்தில் என்ன செய்துகொண்டிருந்தீர்கள் என்று கேட்கத் தொடங்கி, கைலாயம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அங்கே இன்னும் யாரார் இருக்கிறார்கள்? எவ்வளவு காலமாக அங்கே இருக்கிறீர்கள்? இப்போது இங்கு வந்திருப்பதைப் போல், கைலாயத்துக்கு வருவதற்கு முன் எந்த இடத்தில் குடியிருந்தீர்கள்? உங்களுக்கிருப்பதாகச் சொல்லப்படும் இந்தப் படைத்துக் காத்து அளித்து அழிக்கும் வேலையை நீங்களாகவே மேற்கொண்டீர்களா? அல்லது வேறு யாருடையவேனும் வேண்டு

கோவிலின்மீதோ கட்டளையின்மீதோ ஏற்றுக்கொண்டீர்களா? இதனால் உங்களுக்குக் கிடைக்கும் ஊதியம் என்ன? விருப்பு வெறுப்பற்றவராக வீராப்புப் பேசும் உமக்கு ஏன் இந்த வீண் வேலை? என்பன போன்ற ஆயிரக்கணக்கான கேள்விக் கணைகளைப் பூட்டி என்னைத் திக்குமுக்காடித் திணறும்படி செய்துவிட்டான். அது மட்டுமா? அண்மையில் கைலாயத்துக்கு வந்திருந்த தேன்சிங்கைப் பார்த்தீரா? ஹில்லாரியுடன் அளவளாவினீரா என்றெல்லாம் வேறு கிண்டல் செய்து கேலி பேசினான்"

"அப்படியா? சரி! சரி! இதோ எழுதுகிறேன் ஒரு கடிதம்!"

"யாருக்கு?"

"எம் புகழ் பரப்பும் பக்தகோடிகளில் ஒருவருக்கு!"

"அவர் பெயர்!"

"ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்"

"அவரா? அவர்தான் இப்போது வால்மீகி இராமயணத்தை ஆராய்ந்து, கம்பனால் கடவுளாக்கப்பட்ட இராமனை, அவன் ஓர் சாதாரண மன்னனேயன்றி மகேசன் அல்ல; என்ற போதிலும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இராமனைக் கடவுளாக்கும் நிர்ப்பந்தத்தைக் கம்பனுக்கு உண்டாக்கி விட்டதென்ற உண்மையைக் கூற ஆரம்பித்து விட்டாரே! அப்படிப்பட்ட அவருக்கு நீ கடிதம் எழுதினால், ஒருவேளை அவர் சங்க நூல்களை ஆராயத் தொடங்கி, நான் (சிவன்) கடவுளல்ல, சங்கப் புலவருள் ஒருவரே சிவன் என்ற பெயரால் அழைக்கப்பட்டு, நாளடைவில் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அவரைக் கடவுளாக்கிற்று என்ற உண்மையைக் கூறி விட்டால் ஏற்படும் பேராபத்தைக் கூட எண்ணிப் பார்க்காமல், போயும் போயும் அப்படிப்பட்ட ஆசாமிக்கா கடிதம் தீட்டத் திட்டமிட்டாய்! வேண்டாம். விபரீதமாக முடிந்துவிட்டால் என்ன செய்வது?

"தங்களுக்கு அவரைப் பற்றி அவ்வளவு நன்றாகத் தெரியாதென்று நினைக்கிறேன். அவர் கூறும் சில வியாக்யானங்களுக்கு ஒவ்வோர் சமயம் அவராலே கூடப் பொருள் கூற முடியாமல் மற்றவர்களையும் திணற வைக்கக் கூடிய திறமைசாலி. அவருடைய வியாக்யானங்கள் எல்லாம் கடைசியில் நம்மை (கடவுள் குழாத்தை) ஆதரிப்பதாகவே முடியும். எங்கள் விநாயகத்தைப் பற்றிக்கூட அண்மையில் அவர் ஒரு பெரிய பிரசங்கம் செய்திருக்கிறார். அது சமயம்,

> கடந்த நூறு வருஷங்களுக்கு மேலாகப் படிப்பு முறை இந்நாட்டுக்கு ஏற்றதாக இல்லாதிருந்து விட்டதால் தெய்வ பக்தியூட்டும் இயக்கங்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் நடந்தால்தான் நல்ல ஆசிரியர்கள் கிடைப்பார்கள்

என்று அவர் நம்முடைய நிரந்தர நித்தியானந்த வாழ்வுக்காக எவ்வளவு அருமையாகப் பேசியிருக்கிறார்! அப்படிப்பட்ட ஒரு நல்ல பக்த சிகாமணியைப் பற்றிச் சந்தேகம் கொள்வது கூடாது"

"சரி! உன் இஷ்டம்போல் எழுது. ஆனால் இதனால் எல்லாம் நம்முடைய நிலைமை சீர்பட்டு விடுமென்று எண்ண எனக்கென்னவோ தைரியம் பிறக்க வில்லை. அந்த அளவுக்கு மனிதன் மாறி விட்டான்."

★

[4-ம் பக்க தொடர்ச்சி]

படியே தாங்கிப் பிடிக்க போலிசார் வலையைப் பிடித்துக் கொண்டிருந்தனர். இனிமேல் அவன் எப்படித் தப்புவது?

இதை அவனால் சிந்திக்கக்கூட முடியவில்லை. அப்படியே நின்றான். சிலவினாடிகளில் அவன் கண்கள் மங்கியது. முன்னால் தெரிந்தகடல் அலைகளை வாரிக் கொட்டிக்கொண்டிருந்தது. சிறிதுநேரத்தில் அந்தக் கடல் ஓசை கூட கேட்கவில்லை. எல்லாம் இருண்டது. எங்கும் நிசப்தமாகியது. ஒரே இருள்! புகை மண்டலம்!!

மறுபடியும் அவனுக்கு ஞாபகம் வந்தபோது 'அவன் போலிஸ் லாரியில் போய்க்கொண்டிருந்தான்!

கைகளிலே விலங்கு பூட்டப்பட்டிருந்தது. சுற்றிலும் துப்பாக்கி வைத்த வண்ணம் போலிஸ்காரர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். லாரியின் இரு பக்கமும் சல்லடை போல இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. இந்தக் காட்சியைக் கண்ட ஆறுமுகம் மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டான். அந்த அந்தகார இருட்டிலும் ஒரு தூக்கு மரம் தெரிந்தது!

★

புத்தர்
தந்த
பகுத்தறிவு

1. ஒரு விஷயத்தை நல்லதென்றுவது கெட்டதென்றுவது கேள்வி மாத்திரத்தில் நம்பி விடாதே.
2. உண்மையாக நடந்திருக்காவிட்டால் எழுதிவைத்திருப்பார்களா என்கிற காரணத்தினாலேயே, ஒன்று உண்மையானது என்று நம்பிவிடாதே,
3. அநேக இடங்களில் வழங்கப்பட்டு பாரம்பரியமாக நடந்து வருகிற ஐதிகம் என்கிற காரணத்துக்காகவே ஒன்றை நம்பிவிடாதே.
4. அனேகர் நம்பி அதன்படி நடக்கிறார்களே என்கிற காரணத்துக்காக உண்மை என்று நம்பிவிடாதே,
5. ஒரு மகாத்மாவால் வரையப்பட்ட கதையென்று காட்டப்பட்டதினாலேயே நம்பிவிடாதே
6. நமக்கு ஒன்று ஆச்சரியமாய்த் தோன்றப்படுவதனாலேயே, இது தேவனாலோ அல்லது அற்புதமான ஒருவனாலோ ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டு நம்பிவிடாதே.
7. பெரியோர்களாலும் குருமார்களாலும் சொல்லப்பட்டது என்கிற காரணத்தினாலேயே நம்பிவிடாதே.
8. ஒவ்வொரு விஷயத்தையும் நடுநிலையிலிருந்து ஆராய்ச்சி செய்து சகலருக்கும் நன்மை தரத்தக்கதாயிருந்தால் அப்பொழுது அதை ஒத்துக்கொள். ஒத்துக்கொண்டபடி நட.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95 Tirukkachinambi St, Kancheepuram.